REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜனவரி 3 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

89 1932 - 2021

வரு. 90 இல. 02 | Monday 03,January, 2022 | 20பக்கங்கள் | 30/-

## தங்கத்தின் விலை மீண்டும் உச்சத்தை தொட்டது



ஒரே மாதத்தில் ரூ.5000 உயர்ந்தது

இலங்கை சந்தையில் தங்கத்தின் விலை ஒரே மாதத்தில் பவுணுக்கு 5000 ரூபாவினால் அதிகரித்துள்ளது.

இலங்கை சந்தையில் 22 கரட் தங்கத்தின் விலை 1,12,500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் நிலையில், 24 கரட் தங்கம் 1,21,500 ரூபாவிற்கு விற்பனை 06

அந்நிய செலாவணி பிரச்சினையால் இறக்குமதி சிக்கல்;

## நாட்டில் மருந்து தட்டுப்பாட்டை தடுக்க விசேட வேலைத்திட்டம்

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவிப்பு



அந்நிய செலாவணி பிரச்சினை காரணமாக மருந்து இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டில் மருந்து தட்டுப்பாட்டைத் தடுப்பதற்காக விசேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், சுகாதாரத் துறைக்கு எப்போதும் முன்னுரிமை வழங்குமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டில் மருந்து தட்டுப்பாடு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.இதேவேளை, அரச மருந்துக் கூட்டுத்தாபனம், 06

## நிறுவனங்களுக்கிடையிலான போட்டியினாலேயே Gas தட்டுப்பாடு

எரிவாயுவை நேரடியாக இறக்குமதி செய்ய அரசு திட்டம்

எம்.ஏ.அமீனுல்லா



நிறுவனங்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள வர்த்தக நெருக்கடி காரணமாகவே எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, இதற்கு தீர்வாக எரிவாயுவை நேரடியாக இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அதற்கான வேலைத்திட்டம் இந்த ஆண்டு வர்த்தக அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்.

கண்டியில் சனிக்கிழமை (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்துரையாற்றிய அமைச்சர், 06

## பொருட்களின் விலை அதிகரிப்பு முழு உலகிலுமேயே பிரதிபலிப்பு

### இலங்கைக்கு மட்டுமானதல்ல



பொருட்களின் விலை அதிகரிப்பு இலங்கைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் பொருட்களின் விலைகள் இன்று 40 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டு விநியோகச் சங்கிலியில் சிக்கல்கள் இருப்பதாகவும், அவற்றை மீட்க இன்னும் ஒரு வருடம் ஆகும் என்று நிறுவனங்கள் தெரிவித்துள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

அந்நிய செலாவணி வருமானத்தை இலங்கை இழந்துள்ளதாகவும், அடுத்த வருடத்திற்குள் அது மீளும் என நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சந்தையின் தேவைகளில் 80 சதவீத எரிவாயுவை லிட்ரோ நிறுவனமே வழங்கல்;

# நாளாந்த எரிவாயு தேவை இவ்வார இறுதிக்குள் பூர்த்தி

லிட்ரோ எரிவாயு நிறுவனத் தலைவர் உறுதியளிப்பு

ஷம்ஸ் பாஹிம்

உற்பத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த வெளிநாட்டிலிருந்து இயந்திரங்கள் வரவழைப்பு




இந்த வார இறுதிக்குள் நாளாந்த எரிவாயு தேவையை பூர்த்தி செய்ய முடியும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. எரிவாயு உற்பத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு தேவையான இயந்திரங்களை நாட்டுக்கு கொண்டுவந்து நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் தேஷார ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது வீடுகளில் முத்திரையுடன் உள்ள எரிவாயு சிலிண்டர்களை மாற்றுவதற்கான வாய்ப்பு தொடர்பில் 06




கதிர்காமம் மகா தேவாலயத்தில் மாணிக்க கங்கை புதிய நுழைவாயில் நிர்மாணிக்கும் பணி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பமானது. மகா தேவாலயத்திற்கு மின்சார வாகனம் அன்பளிப்பு செய்யப்படுவதையும் அருகில் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ ஆகியோரையும் படத்தில் காணலாம்.




## வல்வெட்டித்துறை மீனவர் இருவரையும் விடுவிக்கவும்

இந்திய அரசு தமிழக நீதிமன்றுக்கு சிபாரிசு 03

## கடந்த இரு வாரங்களில் மட்டும் 48பேர் அடையாளம்

நாட்டில் 'ஒமிக்ரோன்' தொற்று மிக வேகமாக பரவுகிறது - சுகாதார பிரிவு எச்சரிக்கை




நாட்டில் ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார பிரிவு கடுமையாக எச்சரித்துள்ளது.

தற்போது வரையில் நாட்டில் 48 ஒமிக்ரோன் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் வீடுகளிலேயே சிகிச்சையளிக்கும் சேவைக்கான மருத்துவர்கள் பிரிவின் பிரதானி விசேட வைத்திய நிபுணர் மல்காந்தி கல்ஹேன தெரிவித்துள்ளார். 06

## 2022 முதலாம் தவணைக்காக பாடசாலைகள் இன்று ஆரம்பம்

சகல மாணவர்களும் புதிய வகுப்புகளுக்கு தரமுயர்வு



புத்தாண்டை முன்னிட்டு அனைத்து அரசு மற்றும் அரசு அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளும் இன்று (03) திறக்கப்படுகின்றன. சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைவாக பாடசாலைகளை நடத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. கொவிட் தொற்றுநோய் காரணமாக சுமார் ஆறு மாதங்களுக்கு மேல் பாடசாலைகள் மூடப்பட்டு அண்மையில் திறக்கப்பட்டன. இதனையடுத்து 2021 ஆம் ஆண்டு இறுதியில் பாடசாலை விடுமுறையை 10 நாட்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த நிலையில் முதலாம் தவணைக்காக பாடசாலை கள் இன்று திறக்கப்படுகின்றன. (பா)

## தனியான முஸ்லிம் கூட்டணியை உருவாக்க ஏழு MPக்கள் திட்டம்

பேச்சு நடத்தி அரசுக்கு ஆதரவு வழங்கவும் முடிவு



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து தனியான முஸ்லிம் கூட்டணியை உருவாக்கத் தீர்மானித்துள்ளனர்.

கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இரண்டு கட்சிகளின் தலைவர்களான ரவூப் ஹக்கீம் மற்றும் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் மாத்திரமே பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படவுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களால் 06

## இன்று முதல் சகல அரச ஊழியர்களும் கடமைகளுக்கு சமுகமளிக்க அழைப்பு

மாகாண, உள்ளூராட்சி அமைச்சு சுற்றுநிருபம் மூலம் அறிவிப்பு



சகல அரச ஊழியர்களும் இன்று முதல் வழமை போன்று கடமைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

இது தொர்பான சுற்றுநிருபத்தை அரசசேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு வெளியிட்டுள்ளது. கொவிட் பெருந்தொற்றுக் காரணமாக நிறுவகப் பிரதானிகளின் அங்கீகாரத்திற்கு அமைவாக இதுவரை அரச ஊழியர்கள் பணிக்கு அழைக்கப்பட்டிருந்தனர். 06

## மோட்டார் சைக்கிள் விபத்தில் தம்பதி பலி!

பண்டாரகமவில் துயர சம்பவம்



நேற்றுக் காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் தம்பதிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பண்டாரகம பொலிஸார் தெரிவித்தனர். 06


பொது இடங்களுக்கு செல்கையில் தடுப்பூசி அட்டை;

## கட்டாயமாக்கும் நடைமுறை இருவார காலம் தாமதம்




பொது இடங்களுக்கு செல்லும் பொது மக்களுக்கு தடுப்பூசி அட்டைகளை கட்டாயமாக்கும் நடைமுறை பல தரப்பினரால் தாமதமானது. இந்நிலையில், இந்த விடயத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பான அனைத்தையும் இறுதி 06

## ஹட்டன் ஹைலன்ட்ஸ் மாணவன் லவ்னீஷ் உலக சாதனை படைப்பு



கொட்டகலையைச் சேர்ந்த பிரபாகர் – ரெஷ்னி தம்பதிகளின் புதல்வர் லவ்னீஷ் மிக இள வயதில் உலக வரைபடத்தில் உள்ள நாடுகளை அடையாளம் காணும் சாதனையை படைத்துள்ளார்.

குறைந்த வயதில் 06



### 48 மணி நேரத்தில் நடந்த விபத்துகளில் 18 பேர் உயிரிழப்பு

03



### மீன்பிடிக்கச் சென்றவர் முதலைக்கு இரையானார்

திருக்கோவிலில் குடும்பஸ்தர் பலி! 03



### கடற்கரையில் நீராடச் சென்ற இருவர் பலி!

ஒருவரை காணவில்லை; நீர்கொழும்பில் சம்பவம் 03

சுற்றுலா விசாவில் பணிப்பெண் வேலைக்கு சென்று

## ஓமானில் துன்புறுத்தலுக்குள்ளான பதினாறு பெண்கள் நாடு திரும்பினர்




ஓமானுக்குச் சென்று பல்வேறு பிரச்சினைகளால் இலங்கைக்கு திரும்ப முடியாமல் இருந்த 16 இலங்கை வீட்டுப் பணிப்பெண்கள் நேற்று (02) காலை இலங்கை வந்தடைந்துள்ளனர்.

இந்த வீட்டுப் பணிப்பெண்கள் இரத்தினபுரி, பதுளை, கண்டி, குருநாகல், சிலாபம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவார்கள். 06

மின்உற்பத்திக்கான செலவு அதிகரிப்பு;

## மின்சார கட்டணத்தை அதிகரிக்க தீர்மானமில்லை



நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக மின்சார உற்பத்திக்கான செலவும் அதிகரித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், தற்போதைய சூழ்நிலையில் எவ்வித கட்டண அதிகரிப்பும் செய்யப்பட மாட்டாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபை தனது சேவைகளை 06

கிளிநொச்சியில் பாரிய தீ

## கோடிக்கணக்கான சொத்துக்கள் நாசம்



கிளிநொச்சி சேவியர் கடைச் சந்திக்கருகில் இயங்கி வந்த அமுத கடல் கட்டட பொருட்கள் விற்பனை நிலையத்தில் நேற்று (02) காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற பாரிய தீ அனர்த்தம் காரணமாக கோடிக்கணக்கான பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன. மின்சார ஒழுக்கு காரணமாக தீ ஏற்பட்டிருக்கலாம் என 06

### விக்கல் வீராச்சாமி



கிறிஸ்மஸ், புது வருஷ கொண்டாட்– பங்கள பாத்தா நாட்டில கொரோனா பயமோ சனத்திட்ட காசு இல்ல எண்டுற குறையோ இருப்பதா தெரியல....

கோல்பேசல கொரோனாவுக்கு முந்தின காலத்தைவிட கூட்டம், எந்த ஹோட்டலிலும் ரூம்கள் இல்லை, இதை விட வேற என்ன வேணும் சனத்துக்கு...!!!

89 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்








புத்தாண்டுக்கான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரலாற்றுச் சிறப்புமிக்க கிரிவெஹெரவில் மத வழிபாடுகளில் ஈடுபட்டார். கதிர்காமம் பெரிய கோவில் தீர்த்தமான மாணிக்க கங்கைக்குரிய புதிய நுழைவாயில் சுவர் நிர்மாணப்பணிகள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டன. நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ மற்றும் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கங்கானங்கொடை மகப்பேற்று நிலையத்திற்கு புதிய கட்டடம்

## பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் ரூ.30 லட்சம் ஒதுக்கீடு

பேருவளை நகர சபை பிரதேசத்திற்குட்பட்ட கங்கானங்கொடைபகுதியில்அமையப்பெற்றுள்ளமகப்பேற்றுசிறுவர் சிகிச்சை நிலையத்திற்கு அருகில் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் வரவு செலவு திட்ட நிதியொதுக்கீட்டில் புதிய கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. பாராளுமன்ற உறுப்பினரின் 2021ஆம் ஆண்டின் பட்ஜெட்டிலிருந்து ரூபா 30 லட்சம் நிதியை மேற்படி கட்டட புனரமைப்பிற்கு ஒதுக்கியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரின் கங்கானங்கொடை பிரதேச இணைப்பாளர் மபாஸ் மஷ்ஹூர் தெரிவித்தார்.

இந்த கட்டடம் அமைந்துள்ள காணி பாராளுமன்ற உறுப்பினரின் தந்தையான மர்ஹூம் எம்.எஸ்.எம். பளீல் ஹாஜியாரினால் அன்று நன்கொடையாக வழங்கப்பட்டதாகும்.

அன்று பேருவளை நகர சபைத் தலைவராக பணியாற்றிய தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், இவ்விடத்தில் தனது நிதியின் மூலம் புதிய கட்டடத்தை நிர்மாணித்து கொடுத்து மக்களின் அன்றைய தேவையை நிவர்த்தி செய்தார் எனவும் மபாஸ் மஷ்ஹூர் மேலும் தெரிவித்தார்.







எஸ்.ஜ.எம்.பதிப்பகமும் பூவரசி பதிப்பகமும் இணைந்த பதிப்பான தமிழினி ஜெயக்குமாரின் "மழைக்கால இரவு" சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு நிகழ்வு (1) சனிக்கிழமை மாலை புரவலரின் இல்லத்தில் நடைபெற்ற போது, நூலின் முதல் பிரதியை புரவலர் ஹாசிம் உமர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவிடமிருந்து பெறுவதையும் அருகில் தமிழறிஞர் அல் அசூமத் ஊடகவியலாளர் முஸ்டீன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.




தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜனவரி 3 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
04 முதல் 06 வரை
சுபஹ் - 05.02
ளுஹர் - 12.17
அஸர் - 03.38
மஃரிப் - 06.08
இஷா - 07.23

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் மார்கழி 19
ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30 வரை
யோகம்: சித்தமரண யோகம்
திதி: பிரதமை





# 2022ல் அரசு கவிழும் என எதிர்க்கட்சியினர் பகல் கனவு

## ஒருபோதும் நனவாகாது என ஜோன்ஸ்டன் பதில்

2022ல் அரசாங்கம் கவிழ்ந்துவிடும் என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.எதிர்க்கட்சிக்கு கனவு காண உரிமை உண்டு.ஆனால் நனவாக்க முடியாத பகல் கனவுகளை எதிர்க்கட்சிகள் காண்கின்றன என ஆளும் தரப்பு பிரதம கொறடா, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாடசாலை மற்றும் வைத்தியசாலை வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் முதலாவதாக குருநாகல் சேர் ஜோன் கொத்தலாவல பாடசாலைக்கு அருகில் நிர்மாணிக்கப்படவுள்ள வீதிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகள் மற்றும் கிராமிய வைத்தியசாலைகளுக்கான அனைத்து பிரதேச

06

# தமிழ் பேசும் கட்சிகளின் இறுதி ஆவணம் தயார்

## அனைவரதும் பார்வைக்கு அனுப்பி வைப்பு



தமிழ் பேசும் தரப்புக்களின் ஒருமித்த நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் பொது ஆவணத்தைத் தயாரிக்கும் முயற்சியில் புதிய நகல் ஒன்று இறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த ஆவணம் தமிழ்த் தரப்புக் கட்சித் தலைவர்களின் பரிசீலனைக்கு வழங்கப்பட்டதன் பின்னர் தீர்மானம் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின் இல்லத்திலுள்ள அவரது அலுவலகத்தில் (சனிக்கிழமை)

06

# வல்வெட்டித்துறை மீனவர் இருவரையும் விடுவிக்கவும்

## இந்திய அரசு தமிழக நீதிமன்றுக்கு சிபாரிசு

தமிழகத்தில் கைது செய்யப்பட்டுள்ள வல்வெட்டித்துறையை சேர்ந்த இரண்டு மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு இந்திய அரசு நேற்று நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

யாழ்ப்பாணம் – வல்வெட்டித்துறையில் இருந்து கடந்த ஆண்டு ஒக்டோபர் 22 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற நிலையில், இயந்திரக் கோளாறு காரணமாக படகு எல்லை தாண்டி இந்திய கடற்பரப்பிற்குள் சென்றமையினால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தொடர்பில் எல்லை தாண்டிய

06

# 48 மணி நேரத்தில் நடந்த விபத்துகளில் 18 பேர் உயிரிழப்பு

ஷம்ஸ் பாஹிம்

2022 புத்தாண்டில் இதுவரை இடம்பெற்ற விபத்துக்களில் 18 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.வவுனியா, நீர்கொழும்பு, புதுக்குடியிருப்பு, ஹோமாகம, ஹபரணை, பின்னவல, ஹபராதுவ மற்றும் துங்கல்பிட்டிய ,கல்கந்த, எமுலியவெளி மற்றும் பேலியகொட

ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற விபத்துக்களில் இவர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

06

# மீன்பிடிக்க சென்றவர் முதலைக்கு இரையானார்

## திருக்கோவிலில் குடும்பஸ்தர் பலி

திருக்கோவிலில் உள்ள ஆற்றில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர் ஒருவரை முதலை இழுத்துச் சென்று கடித்துக்குதறி அவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சாகாமம் தாலிபோட்டாற்றில் வழமை போல நேற்று முன்தினம் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ஆற்றில் இருந்த முதலை அவரை பிடித்து நீரினில் இழுத்துச் சென்று கடித்து குதறியதையடுத்து அவர் உயிரிழந்துள்ள நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மண்டானை திருக்கோவில் பகுதியைச் சேர்ந்த இராசநாயகம் விநாயக மூர்த்தி ( 55 வயது) என்பவரே

06

# கடற்கரையில் நீராடச் சென்ற இருவர் பலி

## ஒருவரை காணவில்லை; நீர்கொழும்பில் சம்பவம்

நீர்கொழும்பு துன்கல்பிட்டிய பிரதேசத்தின் கப்புன்கொட கடற்கரையில் நீராடிய இரு இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். மற்றொருவர் காணாமல் போயுள்ளார்.

நேற்று முன்தினம் (01) மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

5 இளைஞர்கள் நீராடிக்கொண்டிருந்தபோது, அலையினால் இழுத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களில் அம்பெவெல பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதான இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

ஏனைய நால்வர், பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில்

06




தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மார்கழி மாதம் 19ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஊலா பிறை 29

**குறள் தரும் சிந்தனை**

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்

தன்னைப் பற்றி அதிகமாகக் கணக்குப் போட்டுக் கொண்டு, எல்லை மீறிப் போகிற ஒருவர், நுனிக் கிளையில் ஏறியவர் அதற்கு மேலும் ஏறிட முயற்சி செய்தால் என்ன ஆவாரோ அந்தக் கதிக்கு ஆளாவார்.

# மக்கள் மத்தியில் தவறான அர்த்தம் கற்பிக்கும் எதிரணி!

புதிய ஆண்டில் இப்போதுதான் நாம் காலடி பதித்திருக்கின்றோம். கடந்து சென்ற ஆண்டு இலங்கையர்களுக்கு மாத்திரமன்றி, ஒட்டுமொத்த உலக மக்களுக்குமே மகிழ்ச்சியானதாக அமையவில்லை. கடந்த இரு வருட காலமாக உலகம் பெரும் துயரத்தை சுமந்தபடி உள்ளது. கொவிட் பெருந்தொற்று ஏற்படுத்திய பாதிப்புகளில் இருந்து உலகினால் இன்னும்தான் முழுமையாக மீள முடியாமல் உள்ளது. கொவிட் ஏற்படுத்திய துன்பங்கள் அனைத்து நாடுகளையும் இன்னும் விடாமல் துரத்துகின்றன.

கொரோனாவுக்கு எதிரான கடந்த இரண்டு வருட காலப் போராட்டத்தினால் உலகின் அனைத்து நாடுகளுமே பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி விட்டன. அப்பாதிப்பில் இருந்து மீள்வதற்கு உலக நாடுகள் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றன. எவ்வாறாயினும் பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதென்பது இலகுவான காரியமாக இருக்கப் போவதில்லை. இலங்கையும் பொருளாதார மீட்சிக்காக போராடியபடியே உள்ளது.

கொவிட் தொற்றில் இருந்து நாட்டு மக்களை மீட்பதற்காக கடந்த இரு வருட காலத்தில் இலங்கை அரசாங்கம் செலவிட்ட நிதி ஏராளம். கொவிட் கட்டுப்பாட்டுப் பணிகள், தொற்றுக்கு உள்ளானோரை தனிமைப்படுத்தவும் சிகிச்சையளிக்கவும் மேற்கொண்ட ஏற்பாடுகள், தொற்றுக்குள்ளாகி வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கியமை, ஊரடங்கு காலத்தில் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கியமை என்றெல்லாம் பல்வேறு நடவடிக்கைகளுக்கும் அரசாங்கம் பெரும் தொகை நிதியை செலவிட்டுள்ளது.

அது மாத்திரமன்றி, பல மாதங்களாக ஒட்டுமொத்த நாடுமே முடக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்த வேளையில் அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் முழுமையான சம்பளத்தை மாதாந்தம் வழங்கியது அரசாங்கம். இதன் காரணமாக அரசாங்க ஊழியர்களின் குடும்பங்களால் ஊரடங்கு காலப் பகுதியில் பணக்கஷ்டமின்றி வாழ்க்கையை நடத்த முடிந்தது. பல மாதங்களாக அரசாங்கத்தினால் தேசிய வருமானத்தை ஈட்ட முடியாமல் போயிருந்த போதிலும் கூட, அரசாங்க ஊழியர்களின் மாதாந்த சம்பளம் நிறுத்தப்படவில்லை. அதே போன்று கொவிட் தொற்று தடுப்புக்கான பணிகளையும் எந்தவித குறையுமின்றி அரசாங்கம் மேற்கொண்டு வந்தது.

இது அரசாங்கத்தின் சாதனையாகவே அந்நாளில் நோக்கப்பட்டது. இவையெல்லாம் ஒருபுறமிருக்க, கொவிட் தொற்றுக்கு எதிரான தடுப்பூசியை நாட்டு மக்களுக்கு வழங்குவதில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட துரித செயற்பாடுகளை அன்றைய நாட்களில் உலகமே பாராட்டியமை அனைவருக்கும் நினைவிருக்கலாம். அரசாங்கம் பெருந்தொகை நிதியைச் செலவிட்டு உலகின் பல நாடுகளில் இருந்து கொவிட் தடுப்பூசிகளை அவசரமாக நாட்டுக்கு கொண்டு வந்தது. கொவிட் தடுப்பூசியை அவசரமாக ஏற்றி வருவதற்காக சீனாவுக்கு விசேட விமானமும் அனுப்பப்பட்டிருந்தது.

நாட்டு மக்களுக்கு முதலாம் கட்ட தடுப்பூசி, இரண்டாம் கட்டத் தடுப்பூசி வழங்கப்பட்டு அதன் பின்னர் தற்போது பூஸ்டர் தடுப்பூசியும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவை அனைத்துக்கும் அரசாங்கம் பெருந்தொகை நிதியைச் செலவிட்டு வருகின்றது. இவையெல்லாம் ஒருபுறமிருக்க, கொவிட் பெருந்தொற்று உச்சத்தில் நிலவிய காலப் பகுதியில் அரசாங்கம் மேற்கொண்ட பணிகளை ஒருபோதுமே மறந்து விட முடியாது. அவ்வேளையில் அரசாங்கத்தின் வருமானத்துக்கான அத்தனை கதவுகளுமே அடைபட்டுப் போயிருந்தன. ஆனாலும் நாட்டு மக்களின் நலனே பிரதானமானதெனக் கொண்டுதான் கொவிட் கட்டுப்பாட்டுப் பணிகளை தங்குதடையின்றி அரசாங்கம் மேற்கொண்டு வந்தது.

நாட்டில் தற்போது பொருளாதார நெருக்கடி தோன்றியிருப்பதற்கு இவைதான் காரணங்களாகும். அரசின் நிதிக் கையிருப்புகள் பெருமளவில் கொவிட் துயர் துடைப்புப் பணிகளுக்காக செலவிடப்பட்டு விட்டன. அதன் காரணமாக நாட்டின் பொருளாதாரமும் வீழ்ச்சி நிலைமைக்குச் சென்று விட்டது. இனிமேல் அரசாங்கம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக புதிய உத்திகளை நாட வேண்டியுள்ளது. எனினும் நாடு மீண்டும் பொருளாதாரத்தில் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ளுமென்று பொருளாதார நிபுணர்கள் கூறியிருக்கின்றனர்.

அதுவரை நாட்டு மக்கள் சில சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. இன்று உருவெடுத்துள்ள வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு அரசாங்கத்தின் மீது இலகுவாகப் பழி சுமத்தும் பிரசாரத்தில் எதிரணியினர் ஈடுபட்டு வருவதைக் காண முடிகின்றது. இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்குக் காரணம் என்னவென்பதை எதிரணியினர் நன்கறிவர். ஏனெனில் உலக நாடுகளில் கொரோனா ஏற்படுத்திய தாக்கங்கள் எத்தகையதென்பது எதிரணியினருக்குப் புரியாததல்ல. ஆனாலும் அவர்கள் உண்மையை மறைத்து, நாட்டு மக்களை தவறான திசைக்கு திருப்பும் காரியத்திலேயே ஈடுபடுகின்றனர்.

எதிரணியினரின் இத்தகைய நடவடிக்கை மிகவும் தவறானதாகும். மக்கள் மத்தியில் தவறான அர்த்தத்தை கற்பிக்க அவர்கள் முற்படக் கூடாது. பொருளாதாரப் பாதிப்பில் இருந்து நாடு மீள்வதற்கான ஒத்துழைப்புகளை அரசாங்கத்துக்கு எதிரணியினரும் வழங்குவதே அரசியல் நாகரிகம் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# நாட்டின் நலனுக்கு அதிக பங்களிப்பு வழங்கும் தனியார் பாதுகாப்புத் துறை

## இலங்கை பாதுகாப்பு சேவை வழங்குநர்கள் சங்கத்தின் 2021ம் ஆண்டிற்கான வருடாந்த பொதுக் கூட்டத்தில் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன பாராட்டு



தனியார் பாதுகாப்புத் தொழிற்துறையானது வளர்ந்து வரும் ஒரு துறையாகும். தேசிய பாதுகாப்புக்கு பங்களிப்பு செய்வதால் இவர்களினால் நாட்டிற்கு வழங்கப்படும் சேவை அளப்பரியது என பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

"பொருளாதாரத்திற்கு பங்களிப்பது மற்றும் நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவது என்பன தவிர மிக முக்கியமாக, இலங்கை படைத்தரப்பில் சேவையாற்றிய வீரர்களைக் கொண்டு தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள், நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதில் அதிக பங்களிப்பை வழங்கி வருகின்றன" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை பாதுகாப்பு சேவை வழங்குநர்கள் சங்கத்தின் 2021ம் ஆண்டிற்கான வருடாந்த பொதுக் கூட்டம் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு செயலாளர் என்ற வகையில் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பானது தனக்குரியது என சுட்டிக் காட்டிய அவர், தனியார் பாதுகாப்பு நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 150,000 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களும் தேசிய பாதுகாப்பு இயந்திரத்தில் ஒருங்கிணைந்த பங்குதாரர்களாக மாறியுள்ளதை தான் உறுதியாக நம்புவதாகவும் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும் ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக குறிப்பிட்ட அவர், தேசிய பாதுகாப்பினது பெறுபேறுகள் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமைந்தாலும் அதற்கு பாதுகாப்பு செயலாளர் என்றவகையில் தானே பொறுப்புக் கூற வேண்டும் எனவும் தேசிய பாதுகாப்பு தொடர்பான கட்டளை, அதிகாரம், பொறுப்பு என்பன தனது தோளிலேயே சுமத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் மத்தியில் தொடர்ந்து உரையாற்றிய அவர், கொவிட்19 தொற்று காரணமாக தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் நாடு முழுவதும் வளர்ச்சியைக் காட்டும் தொழில்துறையாக இத்துறை மாறிவருவதை சுட்டிக்காட்டினர்.

பலநோக்கு செயற்பாடுகள் பற்றிய போதுமான அறிவு மற்றும் பாதுகாப்பு சார் செயல்பாடுகளை கையாளும் தொழில்நுட்பம் உள்ளிட்ட இந்தத் தொழில்துறை எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் தேவைகள் குறித்து விளக்கமளித்த பாதுகாப்பு செயலாளர், பொறுப்புகளை ஏற்கத் தயாராகும் மனித மூலதன முதலீட்டில் அறிவு, திறன் அபிவிருத்தி என்பன மிக முக்கியமான காரணிகளாக அமையும் என தெரிவித்தார்.

குறைவான அனுகூலங்கள், இழப்பீட்டு தொகைகள் வழங்கப்படாமை, முறையான காப்புறுதிக் கொள்கைகள் இன்மை மற்றும் ஊழியர்களுக்கான தொழில் அபிவிருத்தி வழிகாட்டல்கள் இன்மை என்பன இந்த தொழில் துறையை பலவீனப்படுத்துவதற்கான முக்கியக் காரணங்கள் என குறிப்பிட்ட பாதுகாப்பு செயலாளர், சேவைகளின் தரத்தை உறுதிசெய்ய அத்தகைய குறைபாடுகளை குறைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பத்தப்பட்ட துறையினருக்கு அறிவுத்தல் வழங்கினார்.

தொழில்நுட்பத்தின் முன்னேற்றம் மற்றும் வளர்ந்து வரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் அதிநவீன தொழில்நுட்பம், சிறப்புப் பாதுகாப்பு கல்விக்கூடங்கள் மற்றும் பயிற்சி ஆகியவற்றை நோக்கி நகர வேண்டியதன் முக்கியத்துவத்தையும் பாதுகாப்புச் செயலாளர் எடுத்துரைத்தார்.

"இலங்கையில் உள்ள அனைத்து பாதுகாப்பு சேவை வழங்குநர்களின் நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவும், அரசாங்கத்துடனான அவர்களின் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்காகவும், பாதுகாப்பு அமைச்சு மற்றும் தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு ஆகியவை எனது தலைமைதத்துவத்தின் கீழ் சில நியதிகளையும், ஒழுங்கு விதிகளையும் அமைத்துள்ளன. தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்களை பதிவு செய்யும் செயல்முறையை ஒழுங்குபடுத்துவதற்கும், இந்தத் தொழில்துறையின் நல்லிணக்கம் மற்றும் நிலையான தன்மையைப் பேணுவதற்கும் அனைத்து முகவர் நிலையங்களும் இந்த விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்" என்று அவர் கேட்டுக் கொண்டார். 2022 ஆம் ஆண்டு முதல் இணைய அடிப்படையிலான பதிவு முறை உருவாக்கப்படவுள்ளதாகவும் பாதுகாப்பு செயலாளர் இங்கு மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் இலங்கை பாதுகாப்பு சேவை வழங்குநர்கள் சங்கத்தின் தலைவர், உறுப்பினர்கள் உட்பட சங்கத்தின் நிர்வாகிகள், அதிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஸாதிக் ஷிஹான்

# பவளவிழா காணும் நாட்டிய நர்த்தகி கலாநிதி கார்த்திகா கணேசர்

இலங்கையின் மூத்த பரதநாட்டிய நர்த்தகியும், உலகப் புகழ் பெற்ற நடன க்கலைஞர் அமரர் பத்மபூஷன் வழுவூர் இராமையாபிள்ளை அவர்களின் சிரேஷ்ட மாணவியுமான கலாநிதி கார்த்திகா கணேசர் இந்த ஆண்டு பவள விழா காணுகிறார். அவுஸ்திரேலியா சிட்னியில் வதியும் இவர், இங்கும் தனது ஆற்றல்களை அடுத்த தலைமுறையினரிடம் கடத்தியவாறு நடனம் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி வருகிறார்.

அத்துடன் சிட்னியிலிருந்து தினமும் 24 மணி நேரம் ஒலிபரப்பாகும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் நிகழ்ச்சியிலும் பகுதிநேர நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் ஒலிபரப்பாளராகவும் இயங்கி வருகிறார்.

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம், சிட்னி உயர்திணை இலக்கிய வட்டம் ஆகியனவற்றிலும் இணைந்திருக்கும் கார்த்திகாவின் வாழ்வும் பணிகளும் நடனக்கலையுடன் பின்னியிருக்கின்றன.

இவரது கவிஞன் கனவு நாட்டிய நாடகம் 1982 இல் பாரதி நூற்றாண்டு காலத்தில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மேடையேறியது.

கொழும்பில் 'கலை இலக்கிய நண்பர்கள் கழகம்' என்ற அமைப்பு 1970 களில் இயங்கியது. இதில் எழுத்தாளர்கள் சாந்தன், மாவை நித்தியானந்தன், குப்பிழான் சண்முகன், யேசுராசா, இமையவன், நெல்லை க. பேரன், கே. எஸ். சிவகுமாரன் உட்பட சிலர் அங்கம் வகித்து அடிக்கடி கலை, இலக்கிய சந்திப்புகளை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

நாடகம், கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம் என்று அந்தக்கலந்துரையாடல்கள் அமைந்திருக்கும். மிகவும் தரமான கருத்துப்பரிமாறல்களுக்கு களம் அமைத்திருந்த அச்சந்திப்பில் ஒரு நாள் நாட்டியம் பற்றிய கலந்துரையாடல் நடந்தது. நடன நர்த்தகி கார்த்திகா கணேசர் எழுதி தமிழ் நாடு தமிழ்ப் புத்தகாலயம் 1969 இல் வெளியிட்டிருந்த தமிழர் வளர்த்த ஆடற்கலை என்ற நூலையே அன்று பேசுபொருளாக எடுத்திருந்தார்கள்.

பல ஆண்டுகள் கழித்து அவுஸ்திரேலியாவில் அறிமுகமான கார்த்திகா கணேசர், அந்த நூலின் இரண்டாவது பதிப்பினையும் காலம்தோறும் நாட்டியக்கலை என்ற தமது மற்றுமொரு நூலையும் எனக்கு அனுப்பியிருந்தார்.

நாட்டியக்கலை தொடர்பாக அவர் நீண்ட காலம் ஆய்வு செய்து நூல்கள் எழுதியுள்ளார். நடன நர்த்தகியாக மாத்திரமன்றி தமது ஆய்வின் வெளிப்பாடாக நாட்டியக் கலாநிதியாகவும் மிளிர்ந்தவர்.

இவர் இதுவரையில் தமிழர் வளர்த்த ஆடற்கலைகள், காலம் தோறும் நாட்டியக் கலை, இந்திய நாட்டியத்தின் திராவிட மரபு, நாட்டியக்கடலில் புதிய அலைகள் முதலான நூல்களையும் வரவாக்கியிருப்பவர். இவற்றில் இந்திய நாட்டியத்தின் திராவிட மரபு நூல் தஞ்சை பல்கலைக் கழகத்தின் விருதினைப் பெற்றுள்ளது.



நாட்டியக்கலைக்கு கற்பனைத்திறனும் அவசியமானது என்பதை தமது முதல் குருவான இயல், இசை வாருதி ஸ்ரீ வீரமணி அய்யரிடம் கற்றிருப்பவர். பரதநாட்டியக்கலையில் பெருவிருட்சம் என்று போற்றப்படும் பத்மபூஷன் நாட்டியகலாகேசரி வழுவூர் இராமையா பிள்ளையின் வீட்டிலேயே தங்கியிருந்து பரத நாட்டிய பயிற்சியை தொடர்ந்த பாக்கியசாலி.

கார்த்திகா ஆய்வாளராகவும் எழுத்தாளராகவும் மாறினார். இவரது நூல்கள் பரதம் பயிலும் மாணவர்களுக்கும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் பாட நூல்களாக விளங்குகின்றன. தமிழர் வளர்த்த ஆடற்கலைகள் நூலில் மட்டுமன்றி தமது இதர நூல்களிலும் தமது நாட்டியக் குருமார்களுக்கும் தம்மை ஊக்குவித்த பேராசிரியர்கள் இந்திரபாலா, கைலாசபதி, சிவத்தம்பி, மௌனகுரு மற்றும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஆசிரியர் சிவகுருநாதன் ஆகியோரையும் நினைவுபடுத்துகிறார்.

**தமிழர் வளர்த்த ஆடற்கலைகள் நூலில் மட்டுமன்றி தமது இதர நூல்களிலும் தமது நாட்டியக் குருமார்க–ளையும் தம்மை ஊக்குவித்த பேராசிரியர்கள் இந்தி–ரபாலா, கைலாசபதி, சிவத்தம்பி, மௌனகுரு மற்றும் தினகரன் முன்னாள் ஆசிரியர் ஆர். சிவகுருநாதன் ஆகியோரையும் நினைவுபடுத்துகிறார் கார்த்திகா**



தமிழர் வளர்த்த ஆடற்கலைகள் நூலை "நீங்களின்றி நானில்லை" என்று குறிப்பிட்டு, தமது அருமைக்கணவர் அமரர் தியாகராஜா கணேசர் அவர்களுக்கே சமர்ப்பித்துள்ளார். இந்நூலின் மூன்றாவது பதிப்பினை கொழும்பில் ஞானம் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

காலம்தோறும் நாட்டியக்கலை நூலின் மூன்றாம் பதிப்பை கொழும்பில் பூபால சிங்கம் புத்தகசாலை வெளியிட்டுள்ளது. இதன் இரண்டாவது பதிப்பு சென்னையில் பிரபல தமிழ்ப்புத்தகாலயத்தினால் வெளியான பொழுது, 1982 ஆம் ஆண்டு தமிழக முதல்வர் எம். ஜி. ஆரிடமிருந்து தமிழக அரசின் விருதைப் பெற்றுக் கொண்டார் கார்த்திகா கணேசர். 1983 இற்கு முன்னர் கார்த்திகாவின் சில நிகழ்ச்சிகளை கண்டு ரசித்திருந்தாலும் அவருடன் உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்ததில்லை.1983 வன்செயல் பலரையும் இடம்பெயரச் செய்து விட்டது. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அவர் சிட்னியில் இருக்கும் தகவல் அறிந்து எமது அவுஸ்திரேலியா தமிழ் எழுத்தாளர் விழா 2005 ஆம் ஆண்டு சிட்னியில் நடந்த பொழுது அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவரது மாணவிகளின் நிகழ்ச்சியை மேடையேற்றித் தருமாறு கேட்டிருந்தேன். எமது விருப்பத்தை அவர் நிறைவேற்றித் தந்தார்.அதன் பின்னர் கடந்த 2014 இல் சிட்னியில் இலக்கிய ஆர்வலர் யசோதா பத்மநாதன் நடத்திய உயர்திணை இலக்கியச் சந்திப்பில் அவரை சந்தித்து உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஒருநாள் அவரே என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, ATBC வானொலிக்கு பேட்டி தருமாறு கேட்ட பொழுது, எனக்கு ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. சுமார் ஒரு மணிநேரம் எனது எழுத்துலகம் பற்றிய நேர்காணலை நேரடி ஒலிபரப்பு செய்தார். இதனால்தான் ஏனையவர்களிலிருந்து கார்த்திகா வேறுபடும் விதம் பற்றி பேராசிரியர் மௌனகுரு உட்பட பலர் இன்றும் அவரை விதந்து பாராட்டி வருகின்றனர். பவளவிழாக் காணும் கலைஞர் நடன நர்த்தகி திருமதி காரத்திகா கணேசர், தொடர்ந்தும் தமது ஆற்றல்களை எமது சமூகத்திற்கு அடுத்த தலைமுறையினர் ஊடாக வெளிப்படுத்த வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

லெ.முருகபூபதி
(எழுத்தாளர், ஊடகவியலாளர்)
அவுஸ்திரேலியா

# இந்தியாவை நாடுவதற்கு முன்னர் யதார்த்தங்களை தேட வேண்டும்

உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் சிறுபான்மையினரின் உரிமைக்கான கோரிக்கைகள் அடங்கிப் போனதாக நினைத்திருந்தவர்களுக்கு தமிழ், முஸ்லிம் கட்சிகளின் சந்திப்புகளும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு நகல் வரையும் முயற்சிகளும் ஆச்சரியத்தையே ஏற்படுத்தியுள்ளன. போர் ஒய்ந்த மறுகணமே, சில தமிழ்த் தலைமைகள் வெளியிட்டிருந்த அறிக்கைகளைப் பார்க்கும் போது உரிமைக்கான உணர்வுகள் அடங்கவில்லை என்பது புரிந்தது. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தாலும் அஹிம்சை ரீதியான போராட்டங்கள் தொடருமென்பதையே இவர்க குறித்த அச்சம் முஸ்லிம்களிடம்தான் இருக்கிறது. ஆயுதப் போராட்ட காலத்திலிருந்த அச்சம் இப்போதைக்கு முஸ்லிம்களுக்கு அவசியமில்லை, மிதவாத தமிழ் தலைமைகளை நம்பலாமென கேள்விகள். வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டால் தமிழ் தேசியவாதத்துக்குள் முஸ்லிம்களுக்கென்ன தீர்வு? எழுத்தில் இது உத்தரவாதப்படுத்தப்படவில்லை என்கிறது ஒரு முஸ்லிம் விடயம் தெளிவாக்கப்படாதது ஏன்?

இவ்விடயத்தை மறுபக்கத்திலும் பார்க்க முடிகிறது. இந்த மாகாணங்களை இணைப்பது பற்றி எப்போதோ பேசப்பட்டிருக்கையில், இப்போது எதற்கு முஸ்லிம்களுக்கு அச்சம்? போராடிய பிரதான சமூகத்தினரின் பிரச்சினைகளுக்கே விடிவின்றியிருக்கையில் தாய்வீட்டுத் தகராறுக்கு முஸ்லிம்கள் ஏன் அவசரப்பட

## தமிழ், முஸ்லிம் கட்சிகளின் சந்திப்புகளும், நரேந்திரமோடிக்கு நகல் வரையும் முயற்சிகளும்!





ளது அன்றைய அறிக்கைகள் புலப்படுத்தின.

ஆனாலும் நீண்ட கால வடுக்களிலிருந்து மீள்வதற்கு தமிழ் மொழிச் சமூகங்கள் இன்னும் தயாரில்லை. இதைத்தான் இவர்களது சந்திப்புக்களின் இழுபறிகள் காட்டி நிற்கின்றன. இந்த வடுக்களைப் போக்குவதிலுள்ள நடைமுறைச் சிக்கல்களை களையாத எந்தப் பேச்சுவார்த்தைகளும் வெற்றியளிக்காது. பேச்சளவில் இவ்வாறான சந்திப்புக்கள் நல்லதாக இருக்குமே தவிர, நடைமுறையில் குடைசாயவே செய்யும்.

இற்றைக்கு மூன்று தசாப்தங்களைக் கடந்துள்ள இந்திய_ இலங்கை ஒப்பந்தம், சிறுபான்மை சமூகங்களின் உரிமையில் எதைச் சாதித்திருக்கிறது? அன்றைய (1987) அதே மனநிலையில்தான் வடக்கு, கிழக்கு சிறுபான்மை இனம் உள்ளதா? இவை ஆராயப்பட வேண்டிய விடயங்கள். குறிப்பாக, முஸ்லிம் தலைமைகளுக்கு இந்த ஆராய்ச்சி அவசியம். ஏனெனில், இணைப்பு முஸ்லிம்களை சாந்தப்படுத்துவது சந்தோஷம்தான். ஆனால், இதிலுள்ள சந்தேகங்களை போக்கும்படி, சாந்தப்படுத்தும் இந்த தமிழ்த் தலைமைகள் நடந்திருக்கிறதா? இதுதா ன் இன்றைய தலைமை. தமிழரசுக் கட்சியின் முன்னைய கால தீர்மானங்களிலே இணைந்த வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கும் ஒரு சுயாட்சிக்கு உத்தரவாதமிருக்கையில், இந்தச் சந்திப்புக்களில் இவ் வேண்டும்? இந்த இரட்டைப் பின்னல்களையே முதலில் இந்த இரு தரப்பு தலைமைகளும் அவிழ்க்க வேண்டும்.

துரதிர்ஷ்டமாக, தங்களது சமூகத்தின் உரிமை விடயத்தில் ஒரு கட்டமைப்பை ஏற்படுத்துவதில் முஸ்லிம் தலைமைகள் பலவீனமடைந்திருக்கின்றன. அதற்காக தமிழ்த் தரப்பு பலமடைந்தது என்பதல்ல பொருள். ஒப்பீட்டளவில் முஸ்லிம்களிடம்தான் இந்தக்கட்மைப்பு இல்லாதிருக்கிறது. எத்தனை கட்சிகள் இருந்தாலும் வடக்கு, கிழக்கு இணைப்பில் சகல தமிழ்க் கட்சிகளும் ஒருமித்திருக்கின்றன.

உண்மையில் தமிழ்மொழியின் பலமும், சிறுபான்மையினரின் நிலமும் வடக்கு, கிழக்கு இணைப்பில்தான் பாதுகாக்கப்படும். கடந்து வந்த காலங்கள் உணர்த்திய கற்றல்கள் இவை. முஸ்லிம்களிடத்திலும் இதற்கு மாற்றுக் கருத்துக்கள் குறைவாகத்தானிருக்கிறது.

இறுக்க நிலைப்பாட்டுடன் உள்ள இந்த தமிழ்த் தலைமைகள், முஸ்லிம் சிவில் சமூகத்துக்குள் நுழைந்து பணியாற்றுவது பற்றிச் சிந்திப்பதுதான் சிறந்தது. வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி, தென்னிலங்கையிலும் அரசியல் செய்யும் கட்சிகளுக்கு இவ்விடயத்தில் முடிவெடுப்பது மூச்சை விடுவதுபோன்ற நிலைதான்.

இதனால்தான், தென்னிலங்கை தமிழ்பேசும் கூட்டணியும் இந்தப் பேச்சுக்களிலிருந்து முகத்தை திருப்பிக் கொண்டதோ தெரியாது! இந்த திசைமாறல்களும், தடுமாறல்களும் இல்லாதிருக்க வேண்டுமானால் இந்தியாவை நாடுவதற்கு முன்னர் யதார்த்தங்களைத் தேட வேண்டும்.

சுஐப் எம்.காசிம் ...

# இளவயதினர் முதல் முதியோர் வரை ஒளிவிலகல் கண்பார்வைக் குறைபாடு

நகரங்களில் வசிக்கும் 7 முதல் 35 வயது நிரம்பிய ஆண்களில் 60 சதவீதம் பேர் 'ரெஃப்ராக்டிவ் எர்ரர்' (Refractive error) என்ற ஒளிவிலகல் குறைபாட்டால் பாதிப்படையும் ஆபத்தை மிக அதிகம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். Refractive error சரிசெய்யப்படாவிட்டால் கண்பார்வைக் கோளாறு, குருட்டுத் தன்மை அல்லது மங்கலான பார்வை (amblyopia) போன்ற கோளாறுகளுக்கு அது இட்டுச் சென்று விடும்.

பெருந்தொற்று காரணமாக நம் அன்றாட வாழ்வில் சமீபத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பல்வேறு கண்

## நகரங்களில் வசிப்போரே அதிகளவில் பாதிப்பு; கொரோனா முடக்க காலத்தில் பலருக்கும் ஏற்பட்டுள்ள சிக்கல்!

பார்வை பிரச்சினைகளை கொண்டு வந்திருக்கின்றன. அவற்றில் ஒரு பிரச்சினைதான் 'ரெஃப்ராக்டிவ் எர்ரர்' என்ற ஒளிவிலகல் குறைபாடு. வீட்டில் தனிமைப்படுத்திக் கொள்ளும் நிலையில், நீண்ட நேரம் ஒளித்திரையை பார்த்துக் கொண்டிருப்பதன் காரணமாக உலகளவில் திடீரென மிகப் பெருமளவில் இது அதிகரித்திருக்கிறது. ஒளிச்செறிவின் மிக அருகாமையில் நீண்ட நேரம் இருந்து வேலை பார்ப்பது ஒளிவிலகல் குறைபாடு ஏற்படுவதற்கான ஆபத்தை அதிகரித்திருக்கிறது.

ஒளி மிகச் சரியாக விழித்திரையின் மீது குவிவதை கண்ணின் வடிவமைப்பு தடை செய்யும் போது ஒளிவிலகல் குறைபாடு ஏற்படுகிறது. மங்கலான பார்வையில் வாசிப்பது கடினம், கண்கள் விலகும் பிறழ்வு, சோர்வு மற்றும் தலைவலி போன்றவைகளுக்கு ஒளிவிலகல் குறைபாடு இட்டுச் செல்கிறது. 'ரெஃப்ராக்டிவ் எர்ரர்' தொடர்பாக மிக பொதுவாக அறியப்படும் பிரச்சினைகளாவன:

கிட்டப் பார்வைக் கோளாறு பொதுவாக வயது வந்தவர்களில் 15_ 49 சதவீதத்தினரிடையேயும் மற்றும் இளம் வயதினர்களில் 1.242 சதவீதத்தினரிடையேயும் உருவாகிறது. தூரப் பார்வை கோளாறு. பொதுவாக வயதானவர்களிடையே காணப்படுகிறது.

சிதறல் பார்வை ஒளிக்கதிர்களை பல்வேறு திசைகளுக்கு விலகிச் செல்ல வைத்து ஒரு பொதுவான குவிய மையத்தை உருவாக்க இயலாது செய்கிறது.

டாக்டர் ரம்யா S, முதுநிலை வல்லுனர் – கண் மருத்துவர்




சென்னை டொக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனையின் கண் மருத்துவரான டொக்டர் எஸ். ரம்யா பின்வருமாறு கூறுகின்றார். "ஒளிவிலகல் குறைபாடு அனைத்து வயதினரையும் பாதிக்கக் கூடிய மிக பொதுவான கண் பார்வைக் கோளாறுகளில் ஒன்று. மரபு சார்ந்த (வயது, குடும்ப வரலாறு மற்றும் இனம் சார்ந்த) மற்றும் சுற்றுச்சூழல் காரணங்களால் (ஒளி குறைவான இடத்தில் மிக அருகாமையில் இருந்து அதிக நேரம் வேலை பார்ப்பது, மற்றும் வாசிப்பது, அதிகம் வெளியே செல்லாமல் வீட்டிலேயே இருப்பது, உடலுழைப்பு குறைவு மற்றும் சமச்சீரான உணவை உண்ணாதது போன்றவை) கண்கள் பாதிப்படைக்கின்றன.




கடந்த சில வருடங்களாக மக்கள் பலர் வாசிப்பதை கடினமாக உணருவதாக தெரிவித்திருக்கிறார்கள். பன்மடங்கு விடுமுறை நாட்கள் மற்றும் குழந்தைகளின் குளிர்கால விடுமுறை நாட்கள் காரணமாக இப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பொதுவாக நகரங்களில் வசிப்பவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களில் 60 சதவீதம் பேர் 7 இல் இருந்து 35 வயதுக்குட்பட்ட ஆண்களாக இருக்கிறார்கள். சூழ்நிலையை நிலைமையின் தீவிரத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்து சிகிச்சை அளிக்க வேண்டும். அறிகுறிகளற்ற ஒளிவிலகல் குறைபாட்டை கொண்டிருக்கும் மக்கள் அதற்கான

## சிகிச்சையளிப்பது சுலபம்; ஆனால் மக்களின் அலட்சியம் காரணமாக பார்வை பறிபோகும் ஆபத்து!

சிகிச்சை எடுத்துக் கொள்வதை தவிர்த்து விடலாம். இருப்பினும், அறிகுறிகள் உள்ள நோயாளிகள், கண்ணாடி, கொண்டாக்ட் லென்ஸ், போன்றவற்றை அணிந்து கொள்வது, ஒளிவிலகல் சீர் செய்யும் அறுவை சிகிச்சையை மேற்கொள்வது அல்லது இவை மூன்றையும் இணைத்து சிகிச்சை எடுத்துக் கொள்வது ஆகியவற்றை கருத்தில் கொள்ளலாம். இந்தப் பிரச்சினையின் ஒட்டுமொத்த பாதிப்பு அதிகம் என்பதை புரிந்து கொள்ள வேண்டியது மிக முக்கியமானது. ஒளிவிலகல் குறைபாடு ஒவ்வொரு வருடமும் உயர்ந்து கொண்டே செல்கிறது. கண்பரிசோதனைகள், ஒளித்திரையை காணும் நேரத்தை குறைத்துக் கொள்வது, பரிந்துரைக்கப்பட்ட கண் கண்ணாடிகளை அணிந்து கொள்வது, 20 20 20 பயிற்சிகளை ( ஒளித்திரையை காணும் ஒவ்வொரு 20 நிமிடத்திற்குப் பிறகும், 20 அடி தூரத்தில் உள்ள ஒரு பொருளை 20 செகண்டுகளுக்கு நீங்கள் பார்க்க வேண்டும்) மேற்கொள்வது மற்றும் ஆரோக்கியமான சமச்சீர் உணவை உண்பது போன்றவை மூலம் இந்தப் பிரச்சினையை சமாளிக்க நாம் முயற்சி செய்யலாம். இந்தப் பிரச்சினையை எதிர்கொள்ள செயல்திறன் மிக்க சிகிச்சை முறைகள் எளிதாக கிடைக்கும் இந்த சமயத்திலும், பொதுமக்களின் அலட்சியம் காரணமாக ஒளிவிலகல் குறைபாடு என்பது மிகப் பெரிய பொது சுகாதார சவாலாக இருக்கிறது". இவ்வாறு டொக்டர் ரம்யா தெரிவித்தார்.

தகவல் :
மணவை அசோகன் ...

# அம்பலந்துவை அல்இல்மா மு.விக்கு பெருமை சேர்த்த மாணவர் கௌரவிப்பு

களுத்துறை கல்வி வலயத்தில் அமைந்துள்ள அம்பலந்துவை அல்இல்மா முஸ்லிம் வித்தியாலயம் பல வழிகளிலும் வளர்ச்சியடைந்து கல்வித் துறையில் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருப்பதாகவும் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் கற்றுக்கொண்டிருக்கும் இல்மாவின் மாணவர்கள் இதற்கு சான்று பகர்வதாகவும் வித்தியாலய அதிபர் ரிஸ்மி மஹ்ரூப் தெரிவித்தார்.

"எமது கிராமம் பாணந்துறை தொகுதியில் சிறிய கிராமமாக இருந்த போதிலும் இன்று பாராட்டி கௌரவிக்கப்படும் இல்மா கல்விக்கூடத்தின் 23 மாணவர்களால் கிராமத்துக்கு பெருமை உண்டாவதாகவும் அவர் குறிப்பிட்டார். எதிர்காலத்தில் இந்த மாணவர்கள் சமூகநல ஆர்வலர்களாக பாடுபட வேண்டும். இதன் மூலம் கிராமத்தின் கல்விச் சூழல் எதிர்காலத்தில் மேலும் பிரகாசமாகும் என அவர் தெரிவித்தார்.

பாணந்துறை கோட்டக் கல்விப் பிரிவின் இல்மா முஸ்லிம் வித்தியாலயத்தில் கடந்த 2020/2021 கல்வியாண்டில் க.பொ.த சா.த மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் விழா அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ரிஸ்மி மஹ்ரூப் தலைமையில் இடம்பெற்றது.

இல்மா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த விழாவில் சமூகநல தன்னார்வ தொண்டு நிறுவன தலைவரா ஹனான் ஹுசைன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் பல்கலைக்கழகம், கல்வியியற் கல்லூரி மற்றும் உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் பரிசளித்து கௌரவிக்கப்பட்டனர். சமூகசேவையாளர் ஹனான் ஹுசைன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.







இல்மா பழைய மாணவர் சங்கம் கொவிட்19 தொற்று காரணமாக பாடசாலைகள் மூடப்பட்ட காலத்தில் மாணவர்களின் கல்வி நிலையை கருத்திற் கொண்டு 'கொரோனா கல்வி வேலைத் திட்டம்' ஒன்றை உருவாக்கி பாடசாலையின் 6_ 11 வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாக விஷேட ஒன்லயின் வகுப்புகளை நடத்தியதாக பழைய மாணவர் சங்க உப செயலாளர் சியான் மஹ்ரூப் தெரிவித்தார்.பல்கலைக்கழக மற்றும் கல்வியியற் கல்லூரி மாணவர்களினால் இந்த வகுப்புகள் நடத்தப்பட்டன.

அம்பலந்துவை ஜும்ஆப்பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி எம். சைத், பழைய மாணவர் சங்க செயலாளர் முகமத் கவுஸ், தனாதிகாரி எம்.பாஹிர் உள்ளிட்ட உறுப்பினர்கள்,ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரும் விழாவில் கலந்து கொண்டனர்.

எம்.எஸ்.எம்.முன்தஸிர் ...
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களிலொருவரும் மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான காலஞ்சென்ற அஸ்ஸெய்யித் அலவி மௌலானாவின் 90வது பிறந்த தினம் ஜனவரி 1ஆம் திகதி தெஹிவளை சிலோன் ரோஸ்வூட் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. அலவி மௌலானாவின் புதல்வர்களான நஜீப் மௌலானா மற்றும் நக்கீப் மௌலானா ஆகியோர் இணைந்து ஒழுங்கு செய்த இந்நிகழ்வில் கல்வியமைச்சர் தினேஷ் குணவர்த்தன, நீதியமைச்சர் அலிசப்ரி, பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி, சவுதி அரேபிய தூதுவராலயத்தின் செயலாளர் கலாநிதி காலித் அல் மக்கா மற்றும் மதத்தலைவர்களும் கலந்துகொண்டுள்ளதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்; தெஹிவளை கல்கிசை விசேட நிருபர்)

## தமிழ் பேசும் கட்சிகளின்... (03 ஆம் பக்கத் தொடர்)

புதிய நகல் ஆவணம் தயாரிக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதிய ஆவண நகல் தயாரிப்புக்காக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அனுப்பிவைத்த குறிப்பும் இதன்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதற்கு அப்பாலும் செல்வோம் என 1987 முல் இலங்கை – இந்தியத் தலைவர்கள் வழங்கிய உறுதிமொழிகள் நினைவூட்டடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த முயற்சியில் எம்.ஏ.சுமந்திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் நிஸாம் காரியப்பர், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ரெலோவின் பேச்சாளரும் இந்த முயற்சியின் இணைப்பாளருமான சுரேந்திரன் குருசாமி ஆகியோர் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வல்வெட்டித்துறை... (03 ஆம் பக்கத் தொடர்)

குற்றச்சாட்டில் வழக்குப் பதிவு செய்து சென்னையில் உள்ள எக்மோர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில், எல்லைதாண்டிய குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்ட வல்வெட்டித்துறையை சேர்ந்த இரு மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு இந்திய அரசு நேற்று நீதிமன்றுக்கு பரிந்துரை செய்துள்ளது.

அதன் பிரகாரம் அடுத்த வாரம் இவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மீன்பிடிக்க சென்றவர்... (03 ஆம் பக்கத் தொடர்)

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இதில் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## கடற்கரையில் நீராடச்... (03 ஆம் பக்கத் தொடர்)

அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர்களில் இருவர் உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்விருவரும் பமுனகம மற்றும் ஏக்கல பிரதேசங்களைச் சேர்ந்த 17, 23 வயதானவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நாட்டில் மருந்து தட்டுப்பாட்டை...

மருந்துப் பொருட்கள் வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதோடு, குறிப்பாக கடனுதவிக்கான கடிதங்களை செலுத்தும் போது, மருந்துகளுக்கு முன்னுரிமை வழங்குமாறு கோரியுள்ளது.

இல்லாவிட்டால், நாட்டில் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, டொலர் பிரச்சினை காரணமாக அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 2022ல் அரசு கவிழும்... (03 ஆம் பக்கத் தொடர்)

வீதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பிரதேச வீதிகளை அடையாளம் காணுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய அலுவலக அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்குமாறும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் ஆட்சியை கவிழ்க்க மட்டுமே செயல்படுகின்றன. மக்கள் நலமாக இருந்தால் தான் ஆட்சியை பிடிக்க முடியும். அதிகாரத்திற்கு வருவது பற்றி சிந்திப்பதற்கு முன்னர் கொவிட் நெருக்கடியை துரிதமாக முடிவு காண்பது எப்படி என்று பார்க்க வேண்டும்.

அரசாங்கத்தை விமர்சிப்பதால் பயனில்லை. நாட்டைக் கட்டியெழுப்ப எதிர்க்கட்சிகளுக்குத் திட்டம் இருந்தால் 24 மணி நேரத்தில் முன்வைக்குமாறு சவால் விட்டேன். இதுவரை அந்த சவால் ஏற்கப்படவில்லை. நாடென்ற ரீதியில் இந்த சவால்களை எவ்வாறு வெற்றிகொள்வது என்பது குறித்து எதிர்க்கட்சிகளுக்கு இத்தருணத்தில் நினைவூட்டுவதாகவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

2022ல் அரசாங்கம் கவிழ்ந்துவிடும் என எதிர்க்கட்சிகளும் கூறுகின்றன. எதிர்க்கட்சிக்கு கனவு காண உரிமை உண்டு. ஆனால் நனவாக்க முடியாத பகல் கனவுகளை எதிர்கட்சிகள் காண்கின்றன. இன்னும் பல ஆண்டுகள் நாம் தான் ஆட்சியில் இருப்போம். அதிகாரத்திற்கு வரத் துடிப்பதை விடுத்து பொறுப்புள்ள எதிரணியாக இருந்தால் கொவிட் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஒத்துழைக்க வேண்டும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## 48 மணி நேரத்தில்... (03 ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்தார். விபத்துக்களில் ஒரே நாளில் 18 பேர் உயிரிழந்தமை சாதாரணமான விடயம் அல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதில் பாடசாலை மாணவர்களும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 48 மணி நேரத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற வீதி விபத்துகள் மற்றும் நீரில் மூழ்கி 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

வீதி விபத்துக்களில் 14 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் நாள்வர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் 7 பேர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாக போலீசார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் கண்டி பிரதான வீதியில் தண்ணிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் (01) இரவு முச்சக்கர வண்டியொன்று கெப் வண்டியுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

பண்டாரகம, வெல்மில்ல பிரதேசத்தில் நேற்று (02) அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் பண்டாரகம, வல்கம பகுதியைச் சேர்ந்த 21 வயதுடையவர் மற்றும் கண்டியைச் சேர்ந்த 19 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். பண்டாரகமவில் வேகமாக வந்த கார் மற்றுமொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட போது முச்சக்கர வண்டியுடன் டிப்பர் வாகனம் மோதியதில் ஒரு குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் மற்றும் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் 12.30 மணியளவில் புகையிரத கடவையில் கார் ஒன்று புகையிரதத்துடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் மகன் செல்பி புகைப்படம் எடுக்கச் சென்ற வேளையில் தெனியாய பத்லேகம சத்மலா நீர்வீழ்ச்சியில் வழுக்கி கீழே விழுந்ததில் தந்தை மற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு மகன்கள் உயிரிழந்துள்ளனர்.

மகனைக் காப்பாற்றுவதற்காக தந்தை நீர்வீழ்ச்சியில் குதித்துள்ளார். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை, மகன் மற்றும் இரு மகள்கள் சுற்றுலா சென்ற போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. காலி, கிந்தோட்டை பகுதியைச் சேர்ந்த தந்தையும் மகனுமேஇவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

(பா)

## மின்சார கட்டணத்தை...

இலாப நோக்கில் வழங்குவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மின்சாரத்தேவையில் அதிகளவு அனல் மின் மற்றும் நீர் மின் உற்பத்தி மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. எரிபொருள் மூலமான மின் உற்பத்திக்கு அதிக நிதி செலவாவது குறிப்பிடத்தக்கது. எரிபொருள் விலை உயர்வுடன் உற்பத்தி செலவு உயர்ந்துள்ளது.(பா)

## மோட்டார் சைக்கிள்...

இந்த விபத்து பண்டாரகம கெஸ்பேவ வீதியில் வெல்மில்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் பண்டாரகம, வல்கம பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய ஆணும், கண்டி பிரதேசத்தில் வசிக்கும் 19 வயதுடைய பெண்ணும் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இருவரும் கெஸ்பேவயில் இருந்து பண்டாரகம நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் அதில் இருவரும் உயிரிழந்துள்ளதாக பண்டாரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தங்கத்தின் விலை மீண்டும்...

செய்யப்படுகின்றது. உலக சந்தையில் தங்கத்தின் விலை, அமெரிக்க டொலரின் விலைக்கேற்ப நிர்ணயிக்கப்படுகின்றது.

இந்த நிலவரப்படி ஒரு அவுண்ஸ் தங்கத்தின் விலை 1818 டொலராக காணப்படுவதாக உலக சந்தை நிலவரம் கூறுகிறது.

## கட்டாயமாக்கும் நடைமுறை...

செய்ய குறைந்தது இன்னும் இரண்டு வாரங்கள் ஆகுமென சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். தடுப்பூசி அட்டையை எடுத்துச்செல்வது அவசியமா அல்லது QR குறியீட்டை அறிமுகப்படுத்துவது போன்ற பிற காரணிகள் இன்னும் இறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தடுப்பூசி அட்டையை எடுத்துச் செல்வதற்குப் பதிலாக QR குறியீட்டை அறிமுகப்படுத்துவது மக்களுக்கு வசதியாக இருக்கும் என்று கருதுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

எனவே, QR குறியீட்டை அறிமுகப்படுத்த தொழில்நுட்ப அமைச்சுடன் இணைந்து தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்த மாத இறுதிக்குள் தேவையான நடவடிக்கைகள் நிச்சயமாக இறுதி செய்யப்படும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## நிறுவனங்களுக்கிடையிலேயான ...

எரிவாயு தட்டுப்பாட்டின் பின்னணியில் வர்த்தக துறையில் பிரச்சினை இருப்பதாகவும், எரிவாயு நிறுவனங்களை கொள்வனவு செய்து ஒன்றிணைக்கும் வேலைத்திட்டம் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இவ்வேளையில் சிலர் தமது வியாபார இலக்கை அடைந்துகொள்ள குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பது போல செயற்பட்டு வருகின்றனர். இதனால் அரசாங்கத்தை மக்கள் விமர்சிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆகவே, ஒரு நபர் அல்லது குழு வர்த்தக நோக்கத்திற்காக மக்களை வேண்டுமென்றே நசுக்க முன்வருவார்களானால் அந்த நேரத்தில் அரசு தலையிட்டு மக்களுக்காக உதவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

எரிவாயு விற்பனையை இப்போது இரண்டு பெரிய நிறுவனங்கள் மட்டுமே செய்து வருகின்றதாகவும் இதனை இன்னும் ஏறக்குறைய ஐந்து நிறுவனங்களாக அதிகரிக்கப்படுமானால் நிறுவனங்களுக்கு இடையேயான போட்டி மக்களுக்கு மேலும் பலனளித்திருக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## தனியான முஸ்லிம் கூட்டணியை...

உருவாக்கப்படவுள்ள புதிய கூட்டணியும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைப்பதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. கடந்த வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக கட்சிகள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கோடிக்கணக்கான சொத்துக்கள்...

சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு கரைச்சி பிரதேச சபையின் தீ அணைப்பு பிரிவினர் சென்று தீயினை 11 மணியளவில முழுமையாக கட்டுப்படுத்தினர்.

கிளிநொச்சியில் உள்ள பாரிய கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையங்களில் ஒன்றாக இயங்கி வந்த மேற்படி நிறுவனத்தின் ஏற்பட்ட தீயினால் கோடிக்கான பெறுமதியான கட்டடப் பொருட்கள் எரிந்து அழிந்தும், முற்றாகவும், பகுதியளவிலும் சேதமடைந்துமுள்ளன.

## ஹட்டன் ஹைலன்ட்ஸ் ...

அதி வேகமாக உலக நாடுகளை அடையாளம் காணுவதில் இந்த சாதனை நிலைநாட்டியுள்ளார்.

உலக வரைப்படத்தின் அனைத்து நாடுகளையும் துல்லியமாக அடையாளம் காட்டி அவர் இந்த சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

எவ்வித அடையாளங்களோ அல்லது எந்தவிதமான எழுத்துக்களோ இல்லாத நிறங்களில் மட்டும் நாடுகள் அடையாளப்படுத்தப்பட்ட உலக வரைபடத்தில் லவ்னீஷ் இந்த சாதனையை நிலைநாட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு உலக நாடுகளை அடையாளம் காட்டுவதற்காக லவ்னீஷ், 3 நிமிடங்கள் மற்றும் 16 செகன்களை மட்டுமே எடுத்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது தந்தை ஓர் கணனி போதனாசிரியர் என்பதுடன், தாய் லிந்துலைதலவாக்கலையின் மருத்துவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது கொட்டகலை பிரதேசத்தில் வசித்து வரும் லவ்னீஸ் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் கல்வி கற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.5 வயது 7 மாதங்கள் 27 நாட்களில் அவர் இந்த சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

கடந்த 2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் திகதி இந்த சாதனை நிகழ்த்தப்பட்ட போதிலும், உலக சாதனை புத்தகத்தில் நேற்றைய தினமே இந்த சாதனை அங்கீகரிக்கப்பட்டது.

## ஓமானில் துன்புறுத்தலுக்குள்ளான ...

வீட்டு எஜமானர்களால் பாலியல் துன்புறுத்தல், தாக்குதல், தீவைப்பு மற்றும் சம்பளம் வழங்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு வகையான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இலங்கை தூதரக 'சுரக்ஷா' தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓமானில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் ஆகியவற்றின் அதிகாரிகள் இணைந்து பணிப்பெண்களை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## இன்று முதல் சகல அரச ஊழியர்களும் ...

இன்று முதல் வழமையான முறையில் பணி இடம்பெறுவதனால் சகல திணைக்களங்களிலும் சுகாதார வழிமுறைகளை முறையாக கடைப்பிடிப்பது அவசியமாகும். நாட்டின் வழமையான நடவடிக்கைகள் இடம்பெறுவதால் அரசசேவையும் புத்தாண்டில் இருந்து வழமைப்போன்று இடம்பெற வேண்டும். கொவிட் தொற்றின் காரணமாக அரச சேவை ஊழியர்களுக்கு 2 வருட காலம் தொடர் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

தேசியக் கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்பட்டு, அரச சேவை பிரமாணம் செய்து இன்றைய தினம் கடமைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கொரோனா பரவல் காரணமாக முக்கியமானவர்களைத் தவிர, அரச ஊழியர்களை வீட்டிலிருந்து வேலை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தேவையின் அடிப்படையில் ஊழியர்களை பணிக்கு அழைப்பதற்காக நிறுவக பிரதானிக்கு அதிகாரம் வழங்கும் நடைமுறை புத்தாண்டு தொடக்கம் இரத்து செய்யப்படுவதாக அரசசேவை, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

## நாளாந்த எரிவாயு...

இன்று (03) கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளாந்த எரிவாயு தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் எரிவாயுவை ஏற்றிய 02 கப்பல்கள், சிலிண்டர்களுக்கு எரிவாயு நிரப்பும் நிலையங்களை வந்தடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. சந்தையின் தேவைகளில் 80 வீதமான எரிவாயுவை லிட்ரோ நிறுவனம் விநியோகித்து வருவதோடு நுகர்வோர் அதிகார சபையின் தரம் மற்றும் கண்காணிப்பின் கீழ் தயாரிப்பு பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இதற்கு முன்னர் சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட நீலம் மற்றும் கறுப்பு நிற முத்திரையிடப்பட்ட எரிவாயு சிலிண்டர்களை மீளப் பெறுவதற்கான தொழில்நுட்ப ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுத்துள்ளதாக நிறுவனம் கூறியுள்ளது. எதிர்காலத்தில் தாமதமின்றி எரிவாயுவை வழங்கும் இயலுமை தமது நிறுவனத்திற்கு உள்ளதாக லிட்ரோ நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த சில மாதங்களாக சந்தையில் எரிவாயு தட்டுப்பாடு காணப்படுவதோடு உலக சந்தையில் எரிவாயுவிலை உயர்ந்த நிலையில் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டது. அதன்படி, 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் புதிய விலை ரூ.2,750 ரூபாவாகவும் 5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை ரூ.1,101 ரூபாவாகவும் 2.5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் புதிய விலை ரூ.520 ஆகவும் அதிகரிக்கப்பட்டது.

இருந்தும் சந்தையில் தொடர்ச்சியாக எரிபொருள் தட்டுப்பாடு காணப்படுவதோடு கலவை தொடர்பான குழப்பம் காரணமாக அநேக சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் பதிவாகின. இந்த நிலையில் எரிவாயு சிலிண்டரின் தரம் குறித்து ஆராய அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததோடு சந்தையில் இருந்த சிலிண்டர்களை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கேள்வியை விட குறைவாகவே சந்தைக்கு எரிபொருள் விநியோகிக்கப்படும் நிலையில் தொடர்ச்சியாக எரிவாயு பெற நீண்ட வரிசை காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் மக்கள் மாற்று வழிகளை நாட ஆரம்பித்துள்ளதோடு மண்ணெண்ணெய் அடுப்புகளுக்கும் விறகு அடுப்புகளுக்கும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. எரிபொருள் இன்றி நூற்றுக்கணக்கான ஹோட்டல்களும் மூடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. லாப் கேஸ் விநியோகம் தடைப்பட்டுள்ள நிலையில் லிட்ரோ கேஸுக்கான கேள்வி மேலும் அதிகரித்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் ஒவ்வொரு இரண்டு தினங்களுக்கும் ஒரு தடவை, சமையல் எரிவாயுவை ஏற்றிய கப்பல் நாட்டிற்கு வரும் எனவும் லிட்ரோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. எரிபொருள் விநியோகம் வழமைக்கு திரும்பிய பின்னர் நிலைமை சீராகும் என எதிர்பார்க்கப்படுகிறது.(பா)

## கடந்த இரு வாரங்களில்...

எதிர்வரும் காலங்களில் அடையாளம் காணப்படும் புதிய ஒமி'க்ரோன் நோயாளர்களை வீடுகளிலேயே வைத்து சிகிச்சையளிக்கும் முறையை நடைமுறைப்படுத்த வேண்டி ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த இரு வாரங்களில் ஒமி'க்ரோன் திரிபு பரவலடையும் வீதத்தில் அதிகரிப்பை அவதானிக்க கூடியதாகவுள்ளது. இதுவரையில் 48 ஒமி'க்ரோன் நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனா'.

இவர்கள் பிரதானமாக கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவில் அடையாளங்காணப்பட்டுள்ளனா'.

அநுராதபுரம் மாவட்டத்திலும் ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனா'. ஒமி'க்ரோன் தொற்றிலுள்ள எச்சரிக்கை தன்மையை புரிந்துகொள்ள வேண்டும். சுகாதார ஆலோசனைகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். தொற்று நிலைமை தீவிரமடைவதற்கு வாய்ப்பளிக்கப்படக் கூடாது.

வீடுகளிலேயே வைத்து சிகிச்சையளிக்கும் முறைக்காக கடந்த 7ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 72 போ' பதிவாகியிருந்தனா'. இதுவரையில் சிகிச்சை நடவடிக்கைகளை நிறைவடைந்து ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 168 போ' விடுவிக்கப்பட்டுள்ளனா'.

இதேவேளை நோய் அறிகுறிகள் இல்லாத கொரோனா நோயாளர்கள் சமூகத்தில் இருக்க கூடும் என்பதால் சகலரும் சகல பொது இடங்களிலும் சுகாதார விதிமுறைகளை கடுமையாக பின்பற்ற வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கொழும்பு டீ.எஸ். சேனாநாயக்க கல்லூரியில் இஸ்லாமிய தின நிகழ்வு







கொழும்பு டீ.எஸ். சேனாநாயக்க கல்லூரியின் 41 ஆவது வருடாந்த இஸ்லாமிய தினம் கடந்தவாரம் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் இஸ்லாமிக் மஜ்லிஸினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சிரேஷ்ட சட்டத்தரணி நத்வீ பஹாவுதீன் மற்றும் சிறப்பு விருந்தினராக ரியாஸ் சங்கானி ஆகியோருடன் பாடசாலை அதிபர் பிரசன்ன உடமுகந்திரம், மன்ற பொறுப்பாசிரியை பிர்தௌஸியா பாறூக் மற்றும் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை இஸ்லாமிக் மஜ்லிஸ் உறுப்பினர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.பாடசாலை இஸ்லாமிக் மஜ்லிஸ் ஒருங்கமைத்திருந்த இந்நிகழ்வில் கொரோனா கால விடுமுறையில் பல்வேறு இஸ்லாமிய போட்டி நிகழ்ச்சிகளை தகவல் தொழில் நுட்பத்தின் உதவியுடன் நடாத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வை சிறப்பிக்கும் முகமாக பல கலை நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டிந்ததுடன் "அல்–இக்ரா" சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# தொழில்வாய்ப்பிற்காக வெளிநாடு செல்ல 120,000 பேர் பதிவு



2021 டிசம்பர் மாத இறுதிக்குள் சுமார் 120,000 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு செல்வதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்தார்.

கட்டாரிற்கு செல்ல 30,000 பேரும், சவுதி அரேபியாவிற்கு 27,000 பேரும், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் வேலை வாய்ப்புக்காக சுமார் 20,000 பேரும் பதிவு செய்துள்ளதாக அவர் கூறினார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வெளியே, தென் கொரியாவில் 1,400, சிங்கப்பூரில் 1,100, சைப்ரஸில் 1,600 மற்றும் ஜப்பானில் 800 வேலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஜப்பான் போன்ற அதிக ஊதியம் பெறும் நாடுகளில் தொழிலாளர்களை அதிக ஊதியம் பெறும் வேலைகளுக்கு அனுப்புவதற்கான திட்டம் உள்ளதாகவும் தென் கொரியா, ருமேனியா, இஸ்ரேல், போலந்து மற்றும் சைப்ரஸ் அதிக திறன் வாய்ந்த தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு வேலைக்கு அனுப்புவது மற்றும் நலன்புரி வசதிகளை அதிகரிப்பது போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கோவிட் மரணங்கள் 24 பதிவாகியுள்ளது

நாட்டில் மேலும் 24 கோவிட் மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, இலங்கையில் இதுவரை பதிவான மொத்த கோவிட் மரணங்களின் எண்ணிக்கை 15,019 ஆக பதிவாகியுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றில் இருந்து மேலும் 224 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 560,949 ஆக அதிகரித்துள்ளது. இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 587,596 அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

# மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வின்றேல் பதவி விலகுவேன்



மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காவிட்டால் பதவி விலக தயாராக உள்ளதாக இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார். நீர்கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தற்போது நாட்டில் எரிவாயு இல்லை, மக்கள் வரிசையில் நிற்கிறார்கள், வீட்டிற்கு எடுத்துச் செல்லும்போது எரிவாயு வெடிக்கிறது.சில நிறுவனங்களுக்கு பொறுப்பற்றவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். யாராவது பதவிகளை பொறுப்பேற்றால் அதைச் சரிவர செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (பா)


# பகிரங்க ஏல விற்பனை

## தெவிநுவர பிரதேச சபை

தெவிநுவர பிரதேச சபைக்குச் சொந்தமான கீழக்காணும் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்

**வாகனங்கள் மற்றும் இயந்திராதிகள்**

| தொடர் இல | வாகனம் | குறைந்தபட்ச கேள்வி ரூபா |
|---|---|---|
| 01 | SPRA 2504 டிரக்டர் | 200,000.00 |
| 02 | வள்ளம் என்ஜின் | 2000.00 |
| 03 | மிதவைப் படகு | 5000.00 |
| 04 | கொங்றீட் கலவை இயந்திரம் | 2000.00 |
| 05 | ஜெனரேட்டர் | 60,000.00 |
| 06 | கை டிரக்டர் | 1000.00 |

தெவிநுவர பிரதேச சபைக்குச் சொந்தமான வாகன முற்றவெளியில் வைக்கப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் இயந்திராதிகள் 2022.01.05ஆம் திகதி முதல் அலுவலக நாட்களில் பரீட்சித்துப் பார்க்கலாம். பகிரங்க ஏல விற்பனை 2022.01.28 வெள்ளிக்கிழமை மு.ப.10.30இற்கு பிரதேச சபை வாகன முற்றவெளியில் இடம்பெறும். அன்றைய தினத்திற்கு கொள்வனவாளரால் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு இணங்கிச் செயற்படல் வேண்டும்.

01. வாகனத்தின் பதிவை ஒப்படைத்தல் மற்றும் அவ் வாகனங்களை நிறுத்தி உள்ள இடங்களில் இருந்து அகற்றி வெளியில் கொண்டு செல்வதற்காக ஏற்படும் செலவுகள் கொள்வனவாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
02. வாகன ஏல விற்பனை இடம்பெற்று 02 நாட்களுக்குள் கொள்வனவாளரால் குறித்த வாகனம் அல்லது இயந்திராதிகளுக்கான முழுமையான தொகையை செலுத்தி அவ் இடத்திலிருந்து அகற்றிக் கொள்ளல் வேண்டும். அத்துடன் பிரதேச சபையினால் அவ்வாகனங்களின் பொறுப்பு ஏற்கப்படமாட்டாது.
03. குறித்த தினம் குறித்த நேரத்திற்கு ஏல விற்பனைக்கு சமுகமளித்தல் வேண்டும். பின்னர் வருகைதந்து கோரிக்கை வைக்க முடியாது.
04. மேலதிக விபரங்களை இவ் அலுவலகத்தின் 041-2222571 தொ.பே இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**சுஜீவ வெதகே,**
**தலைவர்,**
**பிரதேச சபை, தெவிநுவர**





ஹம்பாந்தோட்டை 'வீகெயார் பௌண்டேஷன்' ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தின் தரம் ஐந்து மாணவர்களுக்காக இலவச கருத்தரங்கொன்றை நடத்தியது. கருத்தரங்கில் தலைவர் அனஸ் முஸாபர் உரையாற்றுவதனையும் கலந்துகொண்ட மாணவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.
படங்கள்: ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்

# தந்தை-மகன் உயிர்களை பலியெடுத்த செல்பி ஆசை

தெனியாய பல்லேகம சத்மலை நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் மகனும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெனியாய பொலிஸார் தெரிவித்துள்ளனர். செல்பி படம் எடுக்க முற்பட்ட போது இந்த விபத்து சம்பவித்துள்ளது.

காலி, கிந்தோட்டை, மஹா ஹபுகல பகுதியைச் சேர்ந்த மொஹமட் தாஹிர் மொஹமட் மின்சார் (வயது 48) மற்றும் அவரது மகன் மொஹமட் மொஹீர் (வயது 16) ஆகியோர் உயிரிழந்துள்ளனர். இரண்டாவது மாடியில் இருந்து தனது மகன் செல்பி புகைப்படம் எடுக்க தயாரான போது தவறி நீர்வீழ்ச்சியில் விழுந்துள்ளார். அவரை காப்பாற்ற தந்தை நீர்வீழ்ச்சியில் குதித்ததாகவும், அதன் பின்னர் இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த இருவரின் சடலங்களையும் மீட்டு எடுப்பதற்கு கடற்படையினரின் உதவியை பொலிஸார் நாடியதோடு, தெனியாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பு மட்டக்களப்பு ரயில் சேவைகள் கலாவெவ வரை முன்னெடுப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

கொழும்பு மட்டக்களப்பு ரயில் சேவைகள் அனைத்தும் கலாவெவ ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக கலாவெவ ரயில் நிலைய உயர் அதிகாரியொருவர் தினகரனுக்கு தெரிவித்தார்.

சீதுவயில் இருந்து திருகோணமலை நோக்கி சென்றுகொண்டிருந்த கோதுமை மாவினை ஏற்றிச் செல்லும் சரக்கு ரயில் கடந்த 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் கலாவெவ ரயில் நிலையத்திற்கு அருகில் தடம்புரண்டதாலேயே மட்டக்களப்பு வரையான ரயில் சேவைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் கலாவெவ வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தடம்புரண்ட கோதுமை மாவினை ஏற்றிச் செல்லும் ஆறு கன்டனர் பெட்டிகளும் மேலும் சில ரயில் பெட்டிகளையும் தண்டவாளத்தில் வைத்து அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு ரயில்வே திணைக்கள தொழினுட்ப ஊழியர்கள் நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் தடம்புரண்ட ரயில் என்ஜின் ஏனைய என்ஜின்களை விடவும் அதிக பாரம் கூடியதாக காணப்படுவதாலேயே என்ஜினை தண்டவாளத்தில் வைத்து அப்புறப்படுத்துவதற்கு தொழினுட்ப உத்தியோகத்தர்களுக்கு பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு ரயில் சேவைகள் அனைத்தும் இன்று 03 ஆம் திகதி திங்கட்கிழமை மாலையாகும் போது வழமைக்கு திரும்புவதற்கான சாத்தியம் காணப்படுவதாக கலாவெவ ரயில் நிலையத்தின் உயரதிகாரி மேலும் தெரிவித்தார்.


திகதி 31.12.2021 வியாழக்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4633
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 38,530,750.00
ஆங்கில எழுத்து: H — வெற்றி இலக்கங்கள்: 4 0 0 7 6 7
Power play 1 SPECIAL NUMBERS: 0 7 0 7 7 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.16,330,660.00
Apple iPhone 13 pro வென்ற விசேட இலக்கம: 0789551
Laptop Computer வென்ற விசேட இலக்கம: 1354672 2622101 3147567 1581892 2206117
தங்க நாணயங்களை 3ஐ வென்றவிசேட இலக்கங்கள்: 2723972 2566589 0091544
Smart Phone வென்ற விசேட இலக்கம: 0170737

கொவிசெத — Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2928
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,664,540.00
ஆங்கில எழுத்து: P — வெற்றி இலக்கங்கள்: 19 39 44 67
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,749,154.00

Mega Power மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 981
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,277,200.00
ஆங்கில எழுத்து: Z — சுப்பர் இலக்கம்: 13 — வெற்றி இலக்கங்கள்: 12 16 23 47
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.164,411,001.20
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 663
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,890.000.00
ஆங்கில எழுத்து: G — வெற்றி இலக்கங்கள்: 11 44 64 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 90,874,226.80

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் :1653
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,052,420.00
சுப்பர் இலக்கம்: 07 — வெற்றி இலக்கங்கள்: 08 12 49 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,327,720.40

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

திகதி 01.01.2022 சனிக்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4634
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,009,200.00
ஆங்கில எழுத்து: G — வெற்றி இலக்கங்கள்: 0 2 4 6 0 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,060,236.00

கொவிசெத — Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2929
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,007,660.00
ஆங்கில எழுத்து: A — வெற்றி இலக்கங்கள்: 08 50 66 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,099,868.40

Mega Power மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 982
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,737,420.00
ஆங்கில எழுத்து: D — சுப்பர் இலக்கம்: 26 — வெற்றி இலக்கங்கள்: 22 46 58 60
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 164,482,858.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 664
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,959,520.00
ஆங்கில எழுத்து: I — வெற்றி இலக்கங்கள்: 19 61 68 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 91,021,745.60

ஜாதிக சம்பத — JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1192
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,840,580.00
வெற்றி இலக்கினம்: மகரம் — வெற்றி இலக்கங்கள்: 4 3 2 5 0 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,467,875.60

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் :1654
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,196,900.00
சுப்பர் இலக்கம்: 01 — வெற்றி இலக்கங்கள்: 01 06 52 61
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,327,720.40

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஜனவரி 3
திங்கட்கிழமை

# வவுனியாவில் சிறப்பாக நடைபெற்ற தெய்வீக கிராம நிகழ்வு







இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வவுனியா வெங்கலச் செட்டிக்குளம் கணேசபுரம் பத்திரகாளியம்மன் ஆலய முன்றலில் தெய்வீக கிராம நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

வெங்கலச் செட்டிக்குளம் கணேசபுரம் சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து அறநெறி மாணவர்கள் பல்வேறுபட்ட வேடங்களில் கலைநிகழ்வுகளுடன் ஆன்மிக விழிப்புணர்வு ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ஊர்வலம் கணேசபுரம் ஸ்ரீபத்திரகாளியம்மன் ஆலயம் வரை இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். தெய்வீக கிராம நிகழ்வில் முதல் நிகழ்வாக நந்தி கொடியேற்றப்பட்டு அறநெறி கீதம்இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆலய வழிபாடு, கோமாதா வழிபாடு, குருபூசை, பிடியரிசி சேமிப்பு, வஸ்து தானம், மரநடுகை என்பன சிறப்பான முறையில் இடம்பெற்றன. தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் பஞ்சபுராண பாராயணம் இடம்பெற்றது. நிகழ்வுகள் வெங்கலச் செட்டிகுள உதவி பிரதேச செயலாளர் த.தர்மேந்திரா தலைமையில் நடைபெற்றன.

வரவேற்புரையினையும் நிகழ்வின் முக்கியத்துவத்தினையும் வெங்கல செட்டிகுள இந்து கலாசார உத்தியோகத்தர் சிவ.கஜேந்திரகுமாரும் ஆசியுரையினை ஐ.கோடீஸ்வரம்பிள்ளை குருக்களும் வாழ்த்துரையினை சுவாமி கைவல்யானாந்தவும் சிறப்புரையினை புளியங்குளம் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலைய முகாமையாளர் ச.ஜெயச்சந்திரனும் நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்வில் பிரதமரின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கிளிநொச்சியில் கட்டடபொருள் விற்பனை நிலையத்தில் பாரிய தீ








**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி சேவியர் கடைச் சந்திக்கருகில் இயங்கி வந்த அமுத கடல் கட்டட பொருட்கள் விற்பனை நிலையத்தில் நேற்று (02) காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற பாரிய தீ அனர்த்தம் காரணமாக கோடிக்கணக்கான பெறுமதியான பொருட்கள் எரிந்து அழிந்துள்ளன. மின்சார ஒழுக்கு காரணமாக தீ ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு கரைச்சி பிரதேச சபையின் தீ அணைப்பு பிரிவினர் சென்று தீயினை 11 மணியளவில் முழுமையாக கட்டுப்படுத்தினார்கள்.

கிளிநொச்சியில் உள்ள பாரிய கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையங்களில் ஒன்றாக இயங்கி வந்த மேற்படி நிறுவனத்தில் ஏற்பட்ட தீயினால் கோடிக்கணக்கான பெறுமதியான கட்டடப் பொருட்கள் எரிந்து அழிந்தும், முற்றாகவும், பகுதியளவிலும் சேதமடைந்துமுள்ளன.

# வவுனியா விபத்தில் மரணித்த இளைஞனுக்கு நீதி கேட்டு போராட்டம்



**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மரணித்த இளைஞனுக்கு நீதி கேட்டு ஏ9 வீதியை மறித்து போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து விசேட அதிரடிப் படையினரும், இராணுவமும் களமிறக்கப்பட்டு நிலமை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற தனியார் ஊடக நிறுவனம் ஒன்றிற்கு சொந்தமான பிக்கப் ரக வாகனமும், நொச்சி மோட்டைப் பகுதியில் இருந்து வவுனியா நகரை நோக்கி வந்த முச்சக்கர வண்டியும் தாண்டிக்குளம் பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. குறித்த விபத்தையடுத்து முச்சக்கரவண்டி தடம்புரண்டு முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், பிக்கப் வாகனம் கட்டுப்பாட்டையிழந்து அருகில் இருந்த மரத்துடனும் மோதியுள்ளது.

குறித்த விபத்தில் முச்சக்கர வண்டி சாரதியான வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த 32 வயதான ரஜீபன் என்பவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார். விபத்து தொடர்பில் வவுனியா போக்குவரத்து பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

# மீண்டும் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது



தமிழின விடுதலைக்கான போராட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்கள் எமக்கு ஏற்பட்டுள்ள போதும் அவை நழுவ விட்டமை தான் கடந்த கால வரலாறாக உள்ள நிலையில் தற்போது மீண்டுமொரு சந்தர்ப்பம் உருவாகியுள்ள நிலையில் அதனை நழுவ விட்டுவிடக்கூடாது என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் பகிரங்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடகங்களுக்கான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையை மையப்படுத்தி ஏற்பட்டிருக்கும் பூகோளப்போட்டியின் பங்குதாரர்களான இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகியன தன்னலன்களை மையப்படுத்தி காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளன.

இதில் அமெரிக்கா, இந்தியாவை முன்னிலைப்படுத்திய நகர்வினை இலங்கை விடயத்தில் கையாள்கின்றது. அதேபோன்றே ஏனைய மேற்குலக நாடுகளும் அவ்விதமான நகர்வினையே பின்பற்றுகின்றன. இந்நிலையில் இலங்கையில் மீண்டும் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது என்றார்.

# மன்னார் மாவட்டத்தில் இவ் வருடத்தின் 1 ஆவது கொரோனா மரணம் பதிவு

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் நேற்று முந்தினம் சனிக்கிழமை (1) கொரோனா மரணம் ஒன்று பதிவாகியுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 35 கொரோனா மரணங்கள் பதிவாகி உள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,,,,

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (1) இவ் வருடத்தின் முதலாவது கொரோனா தொற்று மரணம் பதிவாகி உள்ளது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவை சேர்ந்த 70 வயதுடைய முதியவர் ஒருவர் கடந்த 30 ஆம் திகதி மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர்.பரிசோதனையின் போது கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில் அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில்,கொரோனா தொற்றின் காரணமாக ஏற்பட்ட நிமோனியா காய்ச்சல் காரணமாக சனிக்கிழமை (1) சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்தார். இவ் வருடத்திற்கான 1 ஆவது கொரோனா மரணம் நேற்று முன்தினம் பதிவாகி உள்ளது. தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் 35 கொரோனா மரணங்கள் பதிவாகி உள்ளன.

மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 3183 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.இவர்களில் கடந்த வருடம் 2021 ஆம் ஆண்டு 3166 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம் மீட்பு

**யாழ். விசேட நிருபர்**

இளவாலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கீரிமலை, கூவில் வீதியில் உள்ள வாடகை வீட்டில் நேற்றுக் காலை அவர் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ரமணன் (வயது47) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார்.

அவரது குடும்பத்தினர் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு சென்றிருந்த நிலையில் பொலிஸ் உத்தியோகத்தர் வீட்டில் தனிமையில் இருந்துள்ளார் என்றும் பொலிஸார் கூறினர்.





"காரைநகர்" (www.karainews.com) என்ற இணையத்தள சஞ்சிகை இயக்குநர் திரவியநாதன் தீசனுடைய பூரண அனுசரணையுடன் 2022 ஆண்டிற்கான பஞ்சாங்க நாட்காட்டி வெள்ளிக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது. இதில் பிரதம அதிதியாக யாழ்ப்பாண பல்கலைகழக துணைவேந்தர் சிவகொழுந்து சிறிசற்குணராஜா கலந்து சிறப்பித்தார். நாட்காட்டி வெளியீட்டுரையினை காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் வே.முருகமூர்த்தி நிகழ்த்தினார். நாட்காட்டி நிகழ்வு அனுசரணையாளர் சார்பில் .க.நிமலதாசனும் காரைநகர் இலங்கை வங்கி முகாமையாளர் ஆகி|யோரும் இதில் கலந்து சிறப்பித்தனர்.

# யாழ்.பரீட் இக்பால் 2021 கலாபூஷண விருதுக்கு தெரிவு



யாழ்.பரீட் இக்பால் 2021 கலாபூஷண விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் கல்வி கற்ற இவர் பல வருடங்களாக எழுத்துத்துறையில் தடம் பதித்து வருகிறார். இவர் பத்திரிகைகளில் சர்வதேச தினங்கள், உலக நாட்டு தலைவர்களின் வரலாறு, விஞ்ஞானிகளின் வரலாறு, இஸ்லாமிய கட்டுரைகள், உலக புதினக் கட்டுரைகள், வரலாற்று தொடர்களையும் எழுதியுள்ளார். பன்முக ஆளுமை கொண்ட இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், முஸ்லிம் சேவையில் "இஸ்லாமிய புத்தாண்டு முஹர்ரம்", "கலாநிதி ஏ.எம்.ஏ.அஸீஸ் அவர்களின் இனிய நினைவுகள்" எனும் தலைப்புகளில் ஆக்கங்களை தயாரித்து குரல் பதிவு கொடுத்துள்ளார். இவர் சமாதான நீதிவானாகவும் இருந்து சேவையாற்றுகிறார்.

யாழ்.பரீட் இக்பால் "யாழ்.முஸ்லிம் இலக்கிய ஜோதி", "ரத்ன தீபம்", "தேசோதய தீபம்", "கலைமாமணி", "தேசாபிமானி இலக்கிய செம்மல்" ஆகிய விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் யாழ்ப்பாணம் மஸ்றஉத்தீன் பாடசாலை, யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி பழைய மாணவராவார். இவர் யாழ்ப்பாணம் சோனகத் தெருவைச் சேர்ந்த மர்ஹூம்களான பரீட்றஸீனா தம்பதியின் மூத்த புதல்வராவார்.

# ஏகாதசி பிறந்த கதை



மார்கழி மாதத்தில் நம் மனதை குளிர்விக்க வைக்கும் விரதம் தான் வைகுண்ட ஏகாதசி விரதம். இறைவனை சரணடையும், நல்லவர்களுக்கு வைகுண்ட பதவி கொடுப்பதற்காக வைகுண்ட கதவுகள் திறக்கும் நாளாகும்.

தேவர்களையும், முனிவர்களையும் முரன் என்ற அரக்கன் மிகவும் துன்புறுத்தி வந்தான். அவனிடமிருந்து தங்களை காப்பாற்றுமாறு பகவான் விஷ்ணுவிடம் முறையிட்டனர். அனைவரையும் காக்கும் பொருட்டு விஷ்ணு முரனுடன் போரிட்டு வென்றார்.

வென்ற பின்னர் ஒரு குகையில் ஓய்வெடுக்க பெருமாள் சென்றார். இதைப் பார்த்த தோல்வியின் விரக்தியில் இருந்த முரன், பெருமாளை கொல்ல ஒரு வாளை ஓங்கியபடி வந்தார். அப்போது விஷ்ணுவின் உடலில் இருந்து வெளிப்பட்ட சக்தி ஒரு பெண் வடிவில் உருவெடுத்து, முரனுடன் போரிட்டு வென்றாள்.

முரனை வென்ற அந்த திருமாலின் சக்தியால் உருவான அந்த பெண்ணுக்கு ஏகாதசி என அரங்கன் பெயர் சூட்டினார். அதோடு அன்றைய திதிக்கு ஏகாதசி பெயர் வந்தது. இந்த நாளில் தன்னை வழிபடுவோருக்கு வைகுண்ட பதவி அளிப்பதாகா பெருமாள் வரமளித்தார். இதனால் இந்த தினத்தை வைகுண்ட ஏகாதசி என்ற பெயரில் மிக சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

படைப்பு கடவுளான பிரம்மாவின் படைப்பு காலம் முடிந்து, ஊழிக்காலம் தொடங்கியதும் எல்லா உயிர்களும் இறைவனிடம் ஒடுங்கிவிடும். அப்படி ஊழிக் காலம் தொடங்கியதும். மகாவிஷ்ணுவின் தொப்புள் கொடியில் இருந்த தாமரையில் பிரம்மன் அடங்கினான். பிரம்மனின் அடுத்த பகல் தொடங்கியதும், தாமரை இலை தண்ணீரை பிரம்மன் மேல் தெளிக்க, அதில் சில துளிகள் பிரம்மனின் காதுகளில் சென்றன.

விழித்த பிரம்மன் முதல் வேலையாக பிராண வாயுவை தூண்டினார். அப்போது அவரின் இரு காதுகளிலிருந்து காது அசுத்தத்துடன் அந்த தண்ணீர் வெளியே வர ஒன்று மிருதுவானதாகவும், மற்றொன்று கடினமானதாகவும் மது, கைடபர் ஏன அரக்கர்களாக உருவெடுத்தன.

அப்போது பிரம்மனிடம் ஒலி வடிவில் இருந்த வேதங்களை அந்த இரட்டையர்கள் திருடி சென்றர். அப்போது ஹயக்ரீவராக அவதரித்த பெருமாள் வேதங்களை திரும்ப கொண்டு வந்தார்.

பின்னர் உலகில் உள்ள உயிர்களை துன்புறுத்த துவங்கினர். தேவர்கள், முனிவர்கள் என அனைத்து உயிரினங்களும் விஷ்ணுவிடம் முறையிட, அவர்களை அடக்க இறைவன் புறப்பட்டார்.

மது, கைடபருடன் போரிட்ட பெருமாள் அவர்களை அழிக்க முற்பட்டார். அப்போது அந்த சகோதரர்கள் சரணடைந்தனர்.

உங்களின் சக்தியால் உருவான எங்களுக்கு நீங்கள் தான் கருணை காட்ட வேண்டும், நாங்கள் உங்கள் அருகிலேயே இருக்கும் வழியை காட்டுங்கள் என கேட்டுக் கொண்டனர்.

அவ்வாறே அவர்களுக்கு பெருமாள் அருளினார். மேலும் எங்களைப் போல பலரும் இந்த பாக்கியத்தைப் பெற வேண்டும் எனப்தற்காக திருமாலிடம் கேட்டுக் கொண்டனர்.

அதோடு வைகுண்ட ஏகாதசி திருநாளில் திருவரங்க வடக்கு வாசல் வழியாக, அர்ச்சாவதாரத்தில் தங்காள் வெளியே வரும் போது, தரிசிப்பவர்களுக்கும், அவர்கள் செய்த பாவத்தை எண்ணி வருந்தி அதை திருத்திக் கொள்பவர்களுக்கு முக்தி அளிக்க வேண்டும் என அசுர சகோதரர்கள் கேட்டுக் கொண்டனர்.

இதன் காரணமாக தான் வைகுண்ட வாசல் உருவானது. அதோடு மது கைடபர் ஆகியோரை அடக்கியதால் மதுசூதன் என்ற பெயர் பெருமாளுக்கு வந்தது.

# சைவ மஞ்சரி

## மானுடவியல்

(தொடர்)

### கணம்புல்ல நாயனார்



54

**பெயர்:** கணம்புல்ல நாயனார்
**குலம்:** செங்குந்தர்
**பூசை நாள்:** கார்த்திகை கார்த்திகை
**அவதாரத் தலம்:** பேளூர்
**முக்தித் தலம்:** தில்லை

**வரலாறு சுருக்கம்:**

கறைகண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த கணம் புல்ல நம்பிக்கும் (காரிக்கும்) அடியேன்" – என்பது திருத்தொண்டத் தொகையாகும்.

திருக்கோயிலிற் செய்யத் தக்கன யாவை, செய்யத்தகாதன யாவை என்ற வரையறையும், செய்யத்தக்கனவற்றை ஆசாரம் எனத் தழுவுதலும் செய்யத்தகாதனவற்றை அநாசரம் என விலக்கி கடைப்பிடிப்பது சைவத்தின் பிரதானமானவைகளாம்.சரியை,



கிரியை நெறிகளில் நிற்பார்க்கு அவை மிகக் கண்டிப்பான விதிகளாதலால் இவை சைவசமய நெறி முதலிய உண்மை நூல்களாற் பெறப்படும். எனினும், இறைவன்பால் தமக்குள்ள அத்தியந்த உறவுணர்வாகிய மெய்யுணர்வு தலைப்பட்டு அதில் அதீதநிலை யெய்திய மேலோர்கள் விஷயத்தில் ஒரேவழி அவை விதிவிலக்கு நிலைக்குள்ளாதல் ஆகும். அவை வரலாறுகளிற் காணப்படும். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**

# அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**



*18799)* மனிதர்களாகிய நாம் எத்தனை தோஷங்களுடன் ஜென்மம் எடுத்துள்ளோம்?

**யாருக்கும் தெரியாது.**

*18800)* எதனால் அத்தனை தோஷங்களையும் போக்கிக் கொள்ள முடியும்?

**பிரதோஷ உபாசனையால்**

*18801)* பிரதோஷ பூஜை செய்தால் ஒருவருக்குக் கிட்டும் பலன்கள் என்னென்ன?

**1. துன்பம் நீங்கி இன்பம் எய்துவர்,**
**2. மலடு நீங்கி மகப் பேறு பெறுவர்,**
**3. கடன் நீங்கி தனம் பெறுவர்,**
**4. வறுமை ஒழிந்து செல்வம் சேர்ப்பர்,**
**5. நோய் நீங்கி நலம் பெறுவர்,**
**6. அறியாமை நீங்கி ஞானம் பெறுவர்,**
**7. பாவம் தொலைந்து புண்ணியம் எய்துவர்,**
**8. பிறவி ஒழித்து முத்தி அடைவர்.**

*18802)* பிரதோஷ வேளை எது?

**மாலை 4.30 முதல் 6.00 மணி**

*18803)* பிரதோஷ தினத்தன்று உபவாசம் இருந்து சிவாலயத்திற்குச் சென்று ஆலய வழிபாடு செய்தால் என்ன பலன் கிடைக்கும்?

**ஒருவருக்கு ஒரு வருடம் தினமும் ஆலயம் சென்று வழிபட்ட பலன் கிட்டும்.**

*18804)* சனிக்கிழமையில் வரும் பிரதோஷ வேளையில் நாள் முழுவதும் உபவாசம் இருந்து சிவாலயத்திற்கு சென்று இறைவழிபாடு செய்தால் என்ன பலன் கிடைக்கும்?

**5 வருடம் தினமும் தவறாமல் ஆலய வழிபாடு செய்த பலன் கிடைக்கும்.**

*18805)* பஞ்சமா பாதகங்கள் எவை?

**மது, மங்கை, கொலை, கொள்ளை, பொய்**

*18806)* யாருக்கு மஹபாதகம் ஏற்படும்?

**பஞ்சமா பாதகங்கள் செய்கின்றவர்களுக்கு**

*18807)* பிரதோஷ பூஜை ஸ்தோத்திரம் எது?

**ஓம் பவாய நம என்ற மந்திரம்**

*18808)* ஓம் பவாய நம என்றால் என்ன?

**பகவானே என்னை காப்பாற்று**

*18809)* ஓம் ருத்ராய நம என்றால் என்ன?

**குற்றங்களைச் சிந்தனையிலிருந்து மறைய வேண்டுகிறேன்,**

*18810)* ஓம் மிருடாய நம என்றால் என்ன?

**என் துன்பங்களைப் போக்கி சுகம் தரும்படி கேட்கிறேன்**

*18811)* ஓம் ஈசனாய நம என்றால் என்ன?

**நல்ல வழி, நற்புகழ் அடைவதற்கு வழிகாட்ட வேண்டுகிறேன்,**

*18812)* ஓம் சம்பவே நம என்றால் என்ன?

**எனக்கு உயர்வு அடைய வழி காட்டுதல்,**

*18813)* ஓம் சர்வாய நம என்றால் என்ன?

**கொடியவர்களைத் தண்டிக்க தாங்கள் முன் வர வேண்டும்**

# வெற்றிலை மாலை

இலங்கையில் அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்ட சீதையைக் கண்டு பிடிக்க அனுமன் புறப்பட்டுச் சென்றார். நீண்ட தேடுதலுக்குப் பிறகு சீதை அசோக வனத்தில் இருப்பதை அவர் கண்டு பிடித்தார். ராமர் நலமாக உள்ள விபரங்களைச் சீதையிடம் அனுமன் தெரிவித்தார். பிறகு ராமர் தந்த மோதிரத்தை சீதா தேவியிடம் வழங்கினார் ஆஞ்சநேயர். சீதாதேவி மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

பணிவுடன் வணங்கி நிற்கும் ஆஞ்சநேயருக்கு அட்சதை போட்டு ஆசீர்வதிக்க வேண்டும் என்று சீதாதேவி விரும்பினாள். ஆனால் அப்போது சீதைக்கு அட்சதை போன்ற பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இதனால் அருகில் இருந்த வெற்றிலைக் கொடியில் இருந்து அதன் இலைகளைப் பறித்து, அதை அனுமன் மீது தூவி, மனதார ஆசீர்வதித்தாள். அந்த இலங்கையில் அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்ட சீதையைக் கண்டு பிடிக்க அனுமன் புறப்பட்டுச் சென்றார். நீண்ட தேடுதலுக்குப் பிறகு சீதை அசோக வனத்தில் இருப்பதை அவர் கண்டு பிடித்தார். ராமர் நலமாக உள்ள விபரங்களைச் சீதையிடம் அனுமன் தெரிவித்தார். பிறகு ராமர் தந்த மோதிரத்தை சீதா தேவியிடம் வழங்கினார் ஆஞ்சநேயர். சீதாதேவி மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

பணிவுடன் வணங்கி நிற்கும் ஆஞ்சநேயருக்கு அட்சதை போட்டு ஆசீர்வதிக்க வேண்டும் என்று சீதாதேவி விரும்பினாள். ஆனால் அப்போது சீதைக்கு அட்சதை போன்ற பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இதனால் அருகில் இருந்த வெற்றிலைக் கொடியில் இருந்து அதன் இலைகளைப் பறித்து, அதை அனுமன் மீது தூவி, மனதார ஆசீர்வதித்தாள். அந்த வெற்றிலைகளை மாலையாகவும் கட்டி அனுமனுக்குப் போட்டு மகிழ்ச்சியடைந்தாள். சீதா பிராட்டியார் கையால் கிடைத்த இந்த வெகுமதியை ஸ்ரீ ஆஞ்சநேயரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். அன்று முதல் அனுமனுக்கு வெற்றிலை மாலை போடும் வழக்கம் ஏற்பட்டது. யாகவும் கட்டி அனுமனுக்குப் போட்டு மகிழ்ச்சியடைந்தாள். சீதா பிராட்டியார் கையால் கிடைத்த இந்த வெகுமதியை ஸ்ரீ ஆஞ்சநேயரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். அன்று முதல் அனுமனுக்கு வெற்றிலை மாலை போடும் வழக்கம் ஏற்பட்டது.

# ஹம்ஸ யோகம் - 54



பிராணயோகம், ஹம்ஸ யோகம், பிந்து யோகம் போன்ற சாதனைகளின் ஆரம்ப நிலையில் தியானம் முக்கியத்துவம் பெறுகிறது. அத்துடன் இந்த சாதனையின் அதிமுக்கிய அம்சசம் சாதனையின் நோக்கம் என்ன என்பதை சாதகன் முழுமையாகப் புரிந்து தனது சாதனையினைச் செய்வது. இந்த சாதனையில் மனம் குறித்த ஒரு எண்ண ஓட்டத்தில் இயக்குவதும் ,உணர்ச்சிப்பூர்வமாகவும் வைத்திருப்பது அவசியமாகிறது. ஒரு புள்ளியில் கவனத்தைக் குவித்து ஏகாக்கிரம் செய்யும் முறை பின்பற்றப்படக் கூடாது. தனது எண்ணங்கள், ஆற்றல் பிரவாகித்து ஓடுவதை அவதானிக்கும் முறை பின்பற்றப்பட வேண்டும். இப்படிச் செய்யும் போதுதான் பிராண ஓட்டம் உணர்வு சாகரத்தை கடைந்து அகத்தினது ஆழமான பகுதிகளையும், மறைவான பகுதிகளையும் தூய்மைப்படுத்தும்.

சகுண உபாசனை தெய்வத்தின் உருவத்துடன் உணர்ச்சிமயமான தொடர்புடன் செய்யப்பட வேண்டியது. இந்தமுறை இறைவனின் அவதாரங்கள், பிரார்த்தனைகளைக் கூறுதல், பக்திப் பாடல்களைப் பாடுதல் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த உபாசனை முறையில் தனிப்பட்ட மனப்பண்புகள், தியானமுறை அவசியமற்றது. சகுண உபாசனையில் சாதகனது சிரத்தையும்,ஆழமான பக்தியும் அவனது ஆன்மவளர்ச்சிக்கு, உயர்விற்கு துணை புரிகிறது. இதை யோகிகள் ஆழ்ந்தமன ஒருமைப்பாட்டுடன் கூடிய சமாதியின் மூலம் அடைகிறார்கள்.

ஸோஹம் சாதனை, பிந்து சாதனை ஆகியவற்றின் இறுதிநிலையில் சாதகன் ஹிருதயத்தின் மூலம் தகுந்த உணர்ச்சியினை உருவாக்குவதன் மூலம் யோக நித்திரை நிலையை அடைகிறான். இந்த யோக நித்திரை நிலை பார்ப்பதற்கு தூக்கம் போன்று இருந்தாலும் இது ஆழமான ஒரு சமாதி நிலையாகும். எந்தவொரு ஆன்ம சாதனையும் தகுந்த இதய சுத்தி அல்லது உணர்ச்சி பாவத்துடனும், தகுந்த எண்ண ஓட்டமுடைய மனதுடனும், உடல் செயல்களுடனும் செய்யப்பட்டால் எந்தவொரு தீங்கான விளைவினையோ, களைப்பினையோ, துக்கத்தினையோ ஏற்படுத்தாது. யோக நித்திரை என்பது தன்னுணர்வு பேருணர்வில் மூழ்கும் நிலை. இந்த நிலை சில வினாடிகளை உணர்வு அனுபவிக்குமாக இருந்தாலும் இறை சக்தி சாதகனின் கருவிகளில் நிரம்பி சாதகனை தெய்வத்தன்மை உடையவனாக்கும்.

ஸோஹம் சாதனையும், பிந்து சாதனையும் மிக எளிய ஆபத்தற்ற அனைவரும் செய்யக்கூடிய சாதனை முறையாகும். மேல் தரப்பட்டுள்ள அறிவுரைகளின் படி சாதகனுடைய இச்சாசக்தி, பலமான உணர்ச்சி, சாதகனுடைய மனதின் பண்பு அல்லது ஆளுமை சரியாக இருந்தால் இந்த சாதனை கட்டாயம் பலனளிக்கக் கூடியது. இந்த சாதனையின் மூல்ம் அளவு கடந்த ஆன்ம ஆனந்தமும், தொடர்ச்சியான சாதனையின் மூலம் சாதகன் படிப்படியாக தெய்வீகத்தின் இறுதி நிலையையும் தனக்குள் அனுபவிப்பான்.

**(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்






கொழும்பு 15 முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு ஆலயத்தில் அகில இலங்கை ஸ்ரீ சாந்தஸ்வரூபன் யாத்திரை குழுவின் மாபெரும் மஹா மண்டல பூஜை, பஜனை யாத்திரை குழுவின் தலைவர் குருசுவாமி ஜெயமுருகன். வீரமூரத்தி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. பந்தளராஜன் குழுவினரின் உபயத்தில் பூஜை இடம்பெறுவதையும் கலந்துகொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம்.

# சர்வதேச செய்திகள்

## பாகிஸ்தான்; சிறுவர் மரணம் அதிகரிப்பு

பாகிஸ்தான் சிறுவர்கள் இடையே ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் குழந்தை மரணங்களுக்கு சுகாதார மற்ற சூழல் மற்றும் போதிய குடும்ப திட்டங்கள் இல்லாதது காரணம் என கூறப்படுகிறது.



தாய் மற்றும் சேய் ஊட்டச்சத்து குறைபாடு பல வளர்ந்துவரும் நாடுகளிலும் தீவிர பிரச்சினையாக உள்ளது. இதில் ஊட்டச்சத்து குறைபாட்டால் மரணங்கள் நிகழும் சம்பவங்கள் பாகிஸ்தானில் அடிக்கடி நிகழ்வதாக அந்நாட்டின் டோன் செய்தி நிறுவனம் குறிப்பிடுகிறது.

சில கணிப்புகளின்படி ஊட்டச்சத்து குறைபாடுடைய சிறுவர்கள் அதிகம் பாதிக்கும் நிமோனியா நோயினால் பாகிஸ்தானில் ஆண்டுக்கு சராசரியாக 90,000 சிறுவர்கள் இறப்பதாக கூறப்படுகின்றன.

## லிதுவேனியாவுக்கு தாய்வான் ஆதரவு

சீனாவிடமிருந்து லிதுவேனியாவின் சந்தையை மாற்றுவதற்கும் ஜனநாயகக் கூட்டணிகளுடன் பாதுகாப்பான வழங்கல் சங்கிலியை விரிவுபடுத்துவதற்கும் உதவ தாய்வான் முன்வந்துள்ளது.

“தாய்வான், லிதுவேனியா மற்றும் இந்த இரு நாடுகளுக்கு இடையிலான உறவை ஆதரிக்கும் அனைத்து தரப்புகளும் வரலாற்றின் சரியான பக்கத்தில் இருக்கும் என்றும் ஜனநாயகம் மேம்படும் என்றும் உறுதியாக நம்புகிறோம்” என்று தாய்வான் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். தைப்பேவில் இந்த ஆண்டு இடம்பெறவிருக்கும் வர்த்தகக் கண்காட்சியில் லிதுவேனிய வர்த்தகர்கள் பங்கேற்க உதவுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

லிதுவேனியாவில் தாய்வான் பிரதிநிதித்துவ அலுவலகம் திறக்கப்பட்டதை அடுத்து அந்நாட்டுடனான உறவை தரமிறக்கியமை குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்க நாட்டின் பாராளுமன்றில் பாரிய தீ



தென்னாபிரிக்காவின் கேப்டவுன் நகரில் உள்ள பாராளுமன்றக் கட்டடத்தில் பாரிய தீச்சம்பவம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளன.

அந்த வீடியோக்களில் பாராளுமன்றத்தின் மேற்கூரையிலிருந்து தீ கொளுந்துவிட்டு எரிவதும் கரும் புகை வெளியேறுவதும் பதிவாகியிருந்தன. தீ எப்படி ஏற்பட்டது என்பது பற்றிய தகவல் இல்லை.

நெருப்பு இன்னமும் கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை என்றும் கட்டடத்தின் சுவர்களில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் கேப்டவுன் நகரின் அவசரச் சேவை அதிகாரிகள் நேற்று கூறி இருந்தனர்.

விடுமுறை காலம் என்பதால் பாராளுமன்ற அமர்வுகள் தற்போது இடம்பெறவில்லை.

கேப்டவுன் பாராளுமன்ற கட்டடம் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளன.

இதன் பழமையான பகுதி 1884 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. புதிய பகுதிகள் 1820கள் மற்றும் 1980களில் கட்டப்பட்டன.

4 வயதில் கடத்தப்பட்டவர்:

# 33 ஆண்டுகளின் பின் தாயுடன் இணைந்தார்

சீனாவில் 33 ஆண்டுகளுக்கு முன் 4 வயதுச் சிறுபிள்ளையாக இருந்தபோது கடத்தப்பட்ட ஒருவர், மீண்டும் தன் தாயாருடன் சேர்ந்தார்.

அவரைச் சிறுவர்க் கடத்தல் கும்பல் ஒன்று கடத்தியிருந்தது. அவர் சிறுவயதில் வாழ்ந்த கிராமத்தின் வரைபடத்தை ஞாபகத்தில் கொண்டு வரைந்தே தனது தாயை கண்டுபிடித்துள்ளார்.

கடந்த டிசம்பரில் அவர் அந்த வரைபடத்தை சமூக ஊடகத் தளமான டுயினில் பதிவேற்றம் செய்தார். அந்தச் சிறு கிராமத்தின் வரைபடத்தைச் சீன பொலிஸ் அதிகாரிகள் அடையாளம் கண்டனர். அதுபற்றி அவருக்குத் தகவல் வழங்கப்பட்டது.



மரபணுப் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர் தாயும் மகனும் மறுபடியும் ஒன்று சேர்ந்தனர். இருவரும் யுனான் மாநிலத்தில் சந்தித்தனர். கண்ணீர் வழிய அவர் தன் தாயாரைக் கட்டி அணைத்தார்.

33 ஆண்டுகளாக அந்தச் சந்திப்புக்காகக் காத்திருந்த அவர், தன் தாயாரைச் சந்திக்க உதவிய அனைவருக்கும் டுயின் தளத்தில் நன்றியைத் தெரிவித்தார்.

# அமெரிக்காவில் 12,000 விமானப் பயணம் ரத்து

அமெரிக்காவில் கிறிஸ்மஸ் விடுமுறைக் காலத்தில் கொரோனா வைரஸ் பரவல் மற்றும் கடுமையான வானிலையால் பல்வேறு விமானப் பயணங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.



கடந்த சனிக்கிழமை ஒரே நாளில் உலகெங்கிலும் சுமார் 4,400 விமானப் பயணங்கள் ரத்தாயின. அவற்றில் 2,500 அமெரிக்காவில் இடம்பெற்றன.

மத்திய அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவால் விமானப் பயணங்கள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில் ரத்துச்செய்யப்பட்ட விமானப் பயணங்களில் 1,000க்கும் மேற்பட்டவை சிக்காகோவின் விமான நிலையங்களில் இடம்பெற வேண்டியவை.


இந்நிலையில் கிறிஸ்மஸ் விடுமுறைக்கு பின்னர் மக்கள் வீடு திரும்ப ஆரம்பித்திருக்கும் சூழலில் கடும் பனிப்பொழிவு மற்றும் பலத்த காற்று மேலும் இடையூறை ஏற்படுத்துவதாக உள்ளது.

ஒமிக்ரோன் திரிபு காரணமாக அமெரிக்காவில் கொரோனா தொற்று சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒரு வாரத்தில் அமெரிக்காவில் மொத்தம் 12,000 விமானப் பயணங்கள் ரத்துச் செய்யப்பட்டன.

## வியட்நாம் பழங்களுக்கு சீனா இறக்குமதித் தடை

வியட்நாம் எல்லை ஊடாக இறக்குமதி செய்யப்படும் டிரகன் பழங்களுடன் தொடர்புபட்டு கொவிட் 19 வைரஸ் தொற்று சம்பவங்கள் பதிவானதை அடுத்து அந்த பழங்களின் இறக்குமதியை சீனா நான்கு வாரங்களுக்கு நிறுத்தியுள்ளது.



இதன்படி ஹு நிகி எல்லை வாயின் ஊடாக பழங்களை கொண்டுவருவதற்கு ஜனவரி 26 ஆம் திகதி வரை இந்த தடை அமுலில் இருக்கும்.

கடந்த நவம்பர் 20 மற்றும் டிசம்பர் 27க்கு இடையே கொண்டுவரப்பட்ட சரக்குகளில் கொரோனா வைரஸ் இருப்பதை சீன சுங்கத் துறை அடையாளம் கண்டுள்ளது.

2021 இன் முதல் 11 மாதங்களில் 8.4 பில்லியன் டொலர் பெறுமதியான விவசாய பொருட்களை வியட்நாமிடம் இருந்து சீனா இறக்குமதி செய்துள்ளது.

# பிரான்ஸ் புத்தாண்டு தினத்தில் 814 கார்களுக்குத் தீ வைப்பு

பிரான்ஸில் புத்தாண்டு கொண்டாட்டத்தில் மொத்தம் 814 கார்கள் தீ வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதாக உள்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அந்த ஆண்டில் 1,316 கார்களுக்கு தீ வைக்கப்பட்டன.

கொரோனா தொற்று தொடர்பான கட்டுப்பாடுகள் காரணமாகவே இந்த எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. குறிப்பாக கொரோனா தொற்றுக்கு எதிராக முடக்க நிலை அமுலில் இருந்ததால் 2020 புத்தாண்டில் இவ்வாறான கார்களுக்கு தீவைக்கும் சம்பவங்கள் பதிவாகவில்லை. 2005 ஆம் ஆண்டு பல நகரங்களில் இடம்பெற்ற கலவரத்தைத் தொடர்ந்து பிரான்ஸ் புறநகர் பகுதிகளில் கார்களுக்கு தீமூட்டுவது வருடாந்த நிகழ்வாக மாறியுள்ளது.



புத்தாண்டு கொண்டாட்டத்தை ஒட்டி சுமார் 95,000 பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டதோடு இதில் 32,000 தீயணைப்பு படையினரும் உள்ளடங்குவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

## ஹமாஸ் நிலை மீது இஸ்ரேல் தாக்குதல்



காசாவில் இருந்து வீசப்பட்ட ரொக்கெட் குண்டுகள் மத்திய தரைக் கடலில் விழுந்ததை அடுத்து காசாவில் ஹமாஸ் நிலைகள் மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் ஹமாஸ் ரொக்கெட் தயாரிப்பு நிலையம் மற்றும் இராணுவ சோதனைச் சாவடி ஒன்று இலக்கு வைக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் காசாவில் இருந்து வீசப்பட்ட ரொக்கெட் குண்டுகள் இஸ்ரேலை இலக்கு வைத்து நடத்தப்பட்டது என்பது உறுதி செய்யப்படவில்லை. காசா போராட்டக் குழுக்கள் ரொக்கெட் குண்டுகளை சோதிப்பதற்கு அதனை கடலை நோக்கி வீசுவது வழக்கமாக உள்ளது.

இஸ்ரேல் மற்றும் காசாவுக்கு இடையே கடந்த மே மாதம் இடம்பெற்ற 11 நாள் மோதலுக்கு பின்னர் போர் நிறுத்தம் ஒன்று எட்டப்பட்டது தொடக்கம் கடந்த செப்டெம்பரில் இடம்பெற்ற ஒற்றை சம்பவம் தவிர்த்து எல்லை கடந்த ரொக்கெட் தாக்குதல்கள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தடுப்பூசி பெறாதோர் வெளிநாடு செல்ல ஐ.அ. இராச்சியம் தடை

கொரோனா தொற்றுக்கு எதிராக மூன்று தடவைகள் தடுப்பூசி பெறாத குடிமக்கள் வெளிநாடு செல்வதற்கு ஐக்கிய அரபு இராச்சியம் தடை விதிக்கவுள்ளது. வெளிநாடு செல்வதற்கான இந்தத் தடை வரும் ஜனவரி 10 ஆம் திகதி அமுலுக்கு வரவிருப்பதோடு தடுப்பூசி பெறுவது தொடர்பில் மருத்துவரீதியான விலக்கு உள்ளவர்களுக்கு இந்தத் தடை பொருந்தாது என்று அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். எனினும் அந்நாட்டில் அதிக பெரும்பான்மையாக இருக்கும் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு இந்த தடை விதிக்கப்படவில்லை.



ஐக்கிய அரபு இராச்சிய மக்கள் தொகையில் 90 வீதமானவர்கள் முழுமையாக தடுப்பூசி பெற்றுள்ளனர். கடந்த டிசம்பர் 24 ஆம் திகதி வரையில் 34 வீதமானவர்கள் மூன்றாவது தடவையாக கூடுதல் தடுப்பூசியை பெற்றிருந்தனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இதுவரை 750,000க்கும் அதிகமான நோய்த்தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதோடு 2,000க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

# ஆஸ்திரியாவில் மருத்துவர் உதவி தற்கொலை அமுல்

ஆஸ்திரியாவில் பிறர் உதவியுடன் தற்கொலை செய்வதை அனுமதிக்கும் சட்டம் ஜனவரி 1 முதல் அமலாகியுள்ளது.

இதன் மூலம், தீவிர நோய்வாய்ப்பட்ட அல்லது நிரந்தரமாக பலவீன நிலையில் உள்ள பெரியவர்கள், இறப்பதற்காக உதவி பெற ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம்.

இந்த விவகாரம் தொடர்பான அரசியலமைப்பு நீதிமன்ற தீர்ப்பை தொடர்ந்து, டிசம்பர் மாதம் அந்நாட்டு பாராளுமன்றம் புதிய சட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.



ஒவ்வொரு நோயாளியையும் இரண்டு மருத்துவர்கள் மதிப்பீடு செய்து, இந்த நடைமுறை கடுமையான ஒழுக்குமுறைகளுடன் கடைப்பிடிக்கப்படும்.

இந்த மருத்துவர்களின் ஒருவர், வலிநிவாரண மருத்துவ நிபுணராக இருக்க வேண்டும். மற்ற வசதிகள் இருக்கும்போது யாரும் இறப்பதைத் தேர்ந்தெடுக்காததை உறுதி செய்ய, வலிநிவாரண சிகிச்சையை உருவாக்க அந்நாட்டு அரசு நிதி ஒதுக்கியுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

தங்களின் வாழ்வை முடித்துக் கொள்ள வழிவகை செய்யும் ‘பிறர் உதவியுடன் மேற்கொள்ளப்படும்’ தற்கொலை, ஆஸ்திரியாவின் அண்டை நாடான சுவிட்சர்லாந்தில் சட்டபூர்வமாக உள்ளது.

## வட கொரியாவுக்குள் நுழைந்தார் தென்னவர்

அதிகப் பாதுகாப்பைக் கொண்ட தென் கொரிய எல்லையை ஒருவர் தாண்டிச் சென்று வெற்றிகரமாக வட கொரியாவுக்குள் நுழைந்துள்ளார்.



அவரைத் தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூட்டு இராணுவத் தலைவர்கள் தெரிவித்தனர்.

எல்லையைத் தாண்டிய நபர் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பது தெளிவாகத் தெரியவில்லை. எனினும் இராணுவத் தொலைபேசி எண் வழியாகப் பாதுகாப்பு நாடி வட கொரியாவுக்கு அறிக்கை விடுக்கப்பட்டது. தென் கொரியாவில் எல்லை தாண்டுவது சட்டவிரோதமானது.

# அண்டார்டிக்காவில் கொவிட் கொத்தணி

உலகின் மக்கள் நடமாட்டம் அதிகமில்லாத அண்டார்டிக்காவின் பெல்ஜிய ஆய்வு நிலையத்தில் கொவிட்–19 நோய்த்தொற்றுக் கொத்தணி அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் 14ஆம் திகதியிலிருந்து பிரின்சஸ் எலிசபெத் போலார் ஸ்டேசனில் பணிபுரியும் 25 பேரில் 16 பேருக்கு நோய் தொற்றியுள்ளது. ஆனால் அது கடுமையாக இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த ஆய்வு நிலையத்தில் பணிபுரியும் அத்தனை பேரையும் தனிமைப்படுத்துவது கடினமாக உள்ளது. நோய்த்தொற்றினால் அங்கு நடைபெறும் வேலைகளில் பெரிய இடையூறுகள் ஏற்படவில்லை என்று கூறப்பட்டது.



நிலையத்தில் இருக்கும் அனைவருக்கும் இம்மாதம் 12ஆம் திகதியன்று விமானத்தின் மூலம் அந்த இடத்தை விட்டு வெளியேறும் வாய்ப்பு வழங்கப்பட்டது. இருப்பினும் அவர்கள் அனைவரும் தொடர்ந்து அங்கேயே தங்கியிருந்து வேலை பார்ப்பதில் உறுதியாக உள்ளனர்.

கடந்த ஆண்டு, அண்டார்டிக்காவின் பெர்னாடோ ஒஹிக்கிஸ் ஆய்வு நிலையத்தில் இருந்து சிலி இராணுவத்தினர் சிலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நகர்வலம்



## பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 65 சந்தேக நபர்கள் ஒரு மாதத்தில் கைது

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புள்ள பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்த 65 சந்தேக நபர்களை, கடந்த டிசம்பர் (01) தொடக்கம் (31) வரையிலான காலப்பகுதிக்குள், கைது செய்துள்ளதாக மின்னேரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களுள் திறந்த பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்த 17 பேரும் நாளாந்த பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்த 51 பேரும் அடங்குகின்றனர்.

போதைப்பொருள் விநியோகம், தாக்குதல் சம்பவம், வேறு குற்றச்சாட்டுக்கள், திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களே, கைது செய்யப்பட்வர்க ளாவர்.

மின்னேரிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆர்.எம். சீ. ரத்நாயக்கவின் வழிகாட்டுதலின் கீழ், குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் காரியவசம் உள்ளிட்ட குழுவினர் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு சந்தேக நபர்களை கைது செய்தனர்.

## புத்தளம் கடற்கரை சந்தைப்பகுதியை அபிவிருத்தி செய்ய விஷேட திட்டம்

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் நகர சபையினால் நிர்வகிக்கப்படும் புத்தளம் கடற்கரைச் சந்தை பகுதியில், வாகன தரிப்பிடத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் அழகுபடுத்தல் வேலைத் திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி, மாகாணசபை வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் கீழ் புத்தளம் நகராதிபதி எம்.எஸ். எம்.ரபீக்கின் வேண்டுகோளின் பேரில்,இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் நிதி ஒதுக்கீட்டில், கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேராவின் வழிகாட்டலில் இத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் விரைவில் பூர்த்தியடையவுள்ளன. புத்தளம் கொழும்பு முகத்திடலை அண்மித்து காணப்படும் மீன் சந்தைப்பகுதி பொலிவுடன் காட்சி தரும் வகையில்,இந்த வாகன தரிப்பிடம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

வாகனதரிப்பிட பற்றாக்குறைக்கு தீர்வாகவும் இது,அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## முகத்துவாரம் தீவுப் பகுதியில் வீடமைக்க அடிக்கல்

(புத்தளம் தினகரன் நிருபர்)

"சௌபாக்கிய தெகம" அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் கல்பிட்டி முகத்துவாரம் தீவுப் பகுதியில் வீடு கட்டுவதற்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயாதுன்னவின் முயற்சியின் பலனாக,ஆறு இலலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த வீடு அமைக்கப்படவுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயாதுன்ன இதற்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.கல்பிட்டி முகத்துவாரம் தீவு பிரதேசத்தில் சுமார் 150 குடும்பங்கள் எவ்வித உதவியுமின்றி வசித்து வருகின்றனர்.

இங்குள்ள வீடுகளில் 126 வீடுகள் ஓலை குடிசைகளாகவே உள்ளன. உதவிகளை எதிர்பார்த்து காத்திருக்கும் ஒரு கிராமமாகவே கல்பிட்டி முகத்துவாரம் அமைந்திருக்கிறது.

இப்பிரதேசத்தில் மேலும் பல வீடுகளை அமைத்து தருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயாதுன்ன இதன்போது உறுதியளித்தார்.

## மக்களுக்கான மானியங்கள், சலுகைகள் ஜனவரி முதல் அமுலாவதாக அறிவிப்பு

(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)

புத்தளம் நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் மாட்டிறைச்சிக் கடைகளில், நிர்ணய விலைகளுக்கு அதிகமாக மாட்டிறைச்சியை விற்பனை செய்தால் அதுதொட்டர்பில் தனக்கு தெரியப்படுத்துமாறு புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம். ரபீக் பொதுமக்களை கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தளம் நகர பிதாவினால் கடந்த வருடம் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் முன்மொழியப்பட்ட மக்களுக்கான சலுகைகள் மற்றும் மானியங்கள் நேற்று (01) முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அதனடிப்படையில் புத்தளம் நகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்கள், மாட்டிறைச்சி நிர்ணயவிலையாக ஆயிரம் ரூபாவாகவும், கலவன் ஈரல் 1200 ரூபாவாகவும் விற்க வேண்டும்.எவரேனும் நிர்ணயிக்கப்பட்ட விலைப்பட்டியலை மீறி அதிகரித்த விலையில் விற்பனை செய்தால், அதுதொடர்பில் எனக்கோ அல்லது நகரசபை நிர்வாகத்தினருக்கோ தெரியப்படுத்தவும்.

இதேவேளை, நடப்பு வருடத்திற்கு வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பல சலுகைகள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ள தாகவும் புத்தளம் நகர பிதா எம்.எஸ்எம்.ரபீக் மேலும் தெரிவித்தார்.

## பல்வேறு மோட்டார் சைக்கிள் திருட்டு சம்பவங்களுடன் தொடர்புள்ளவர் கைது

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புள்ள பிரதான சந்தேக நபர் ஒருவரை, எப்பாவல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலன்னறுவ மின்னேரிய பகுதியில் வைத்து இச்சந்தேக நபர் நேற்று கைதானார். எப்பாவல பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவம் தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டை, அடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் இந்நபர் கைதானார்.

எப்பாவல பொலிஸார் இவரைக் கைது செய்துள்ளதுடன் 06 சிறிய ரக மோட்டார் சைக்கிள்களையும் இவரிடமிருந்து கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர் மின்னேரிய பகுதியை வசிப்பிடமாக கொண்ட 67 வயதுடயவராவார். இதற்கு முன்னரும் 17 மோட்டார் சைக்கிள்களை திருடிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், சிறைச்சாலையிலிருந்து இவர்,தப்பிச் சென்றுள்ளதாக ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எப்பாவல பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர், இந்நபர் தமுத்தேகம நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.



நத்தார் பண்டிகையையொட்டி வெலிகம சுவஸஹன கிறிஸ்தவ ஆலயத்தில் மதத்தலைவர்களுக்கிடையில், சுமூக சந்திப்பு இடம் பெற்றது. இதில் இஸ்லாம், பௌத்த, கிறிஸ்தவ மதகுருமார்கள் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் இவர்களுக்கு நினைவுப் பொதிகளும் வழங்கப் பட்டன. இந்நிகழ்வில் காலி மாவட்ட கிறிஸ்தவ ஆயரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்: வெலிகம தினகரன் நிருபர்)

## வறிய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தியடைந்த மாணவருக்கு புலமைப்பரிசில் கொடுப்பனவு, தொழிற்பயிற்சி பெறும் மாணவிகளுக்கு பண உதவி மற்றும் விஷேட தேவையுடையோருக்கு, சக்கர நாற்காலிகள், ஊன்று கோல்கள் வழங்கும் நிகழ்வுகள், தெமடகொட வை.எம்.எம்.ஏ தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்றன.

வை.டபிள்யூ. எம். ஏயின் தலைவி தேசமான்ய பவாஸா தாஹா தலைமையில், இவை வழங்கப்பட்டன. நிகழ்வின், விஷேட அதிதியாக கனடாவின் இலங்கைக்கான முஸ்லிம் பெண்கள் அமைப்பின் தலைவி பைரூஸா காசிம் மற்றும் நஸீரா ஹூசைன் பவுண்டேசனின் தலைவர் கலாநிதி காலித் பாறுக் மற்றும் அமைப்பின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

## வீட்டு முற்றத்தில் அரிய வகை உயிரினம் மீட்பு

(புத்தளம் தினகரன் நிருபர்)



புத்தளம் முந்தல் பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை (28) வீட்டு முற்றத்தில் காணப்பட்ட அரிய வகை எறும்புத் தின்னியை ஊர்மக்கள் பிடித்துள்ளனர்.

இதுபற்றி, புத்தளம் வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினருக்குத் பொது மக்கள் தகவல் வழங்கினர்.

இதை யடுத்து குறித்த இடத்திற்கு விஜயம் செய்த வனஜீவராசிகள் திணைக்கள கட்டுப்பாட்டுப் பிரிவினர், எறும்புத்தீனியை உயிருடன் மீட்டு வில்பத்து சரணாலயத்தில் விடுவித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த உயிரினம், எதிரிகளைக் கண்டால் உடலை பந்து போன்று சுருட்டி வைத்துக் கொண்டு தம்மைக் காத்துக் கொள்ளும் குணமுடையதென அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வுயிரினமானது இலங்கையில் அழிவடைந்து வருவதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## கிராமத்துடன் கலந்துரையாடல் அமைச்சர் தலைமையில் கூட்டம்

(திறப்பனை தினகரன் நிருபர்)

கிராமத்துடன் கலந்துரயாடல் வேலைத் திட்டத்தின் கீழ், புது வருடத்தில் ( 2022 ) அநுராதபுர மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அபிவிருத்தி வேலைகள் தொடர்பில் கலந்துரையாடல், நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கென முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள், திட்டங்கள் பற்றி இதில், ஆராயப்பட்டது.

மாவட்டத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதி நிதிகள்,மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள்,அரச அதிகாரிகள் என பலர் இதில் கலந்து கொண்டு தமது கருத்துக்கள்,யோசனைகளை முன் வைத்திருந்தனர்.

கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் இந்த வேலை திட்டங்கள் நடைமுறை படுத்தப்படவுள்ளன.

அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தலைமையில் இக் கலந்துரையாடல் அநுராபுரத்தில் இடம் பெற்றது.



அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானின் நிதியொதுக்கீட்டில், புனர் நிர்மாணம் செய்யப்பட்ட கலாவெவ கப்பல்கம குறுக்குத்தெரு நேற்றுமுன்தினம் (01) பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம். (படம்: திறப்பனை தினகரன் நிருபர்)



பண்டாரகம பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஹிரண பிரதேச விற்பனை நிலையம், கோப்சிட்டியாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.அத்தியாவசியப் பொருட்களை, மக்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் நோக்கில்,இது கோப் சிடியாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல அண்மையில் இதனைத் திறந்து வைத்தார். இதன்போது,விஷேட மத நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(படம்;பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)

## மாம்புரி பகுதியிலுள்ள பிரதான கால்வாய் சேதம், போக்குவரத்து செய்வதில் பயணிகள் சிரமம்

(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)

பாலாவி கற்பிட்டி பிரதான வீதியின் மாம்புரி தேங்காய் தொழிற்சாலைக்கு அருகிலுள்ள சிறிய கால்வாய், சேதமடைந்துள்ளதால், வாகன சாரதிகள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர்,கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால்,இந்த பிரதான வீதியில் உள்ள சிறிய கால்வாய் பாரிய குழிகள் ஏற்பட்டு உடைந்தது.

இதையடுத்து, மண் மேடுகள் அமைக்கப்பட்டதுடன், வாகனங்கள் செல்வதற்கு தற்காலிக வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. வீதி அபிவிருத்தி அதிகார சபை,இந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

இந்நிலையில், பாலாவி கற்பிட்டி



பிரதான வீதியில் நாளாந்தம் கனரக வாகனங்கள் உட்பட நூற்றுக்கணக்கான வாகனங்கள் பயணிக்கின்றன.

இதனால், இக் கால்வாய் மேலும் உடையலாமென, பயணிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். எனவே, இதனை அபிவிருத்தி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## அறுபது உறைகளுக்குள் அடைக்கப்பட்ட 1800 கிலோ மஞ்சளுடன் ஒருவர் கைது

(புத்தளம் தினகரன் நிருபர்)

பொலிஸ் விஷேட புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், உலர்ந்த மஞ்சள் பொதிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கற்பிட்டி கப்பலடி பகுதியில் வெள்ளியன்று (31) அதிகாலை 4 மணியளவில், இச்சுற்றிவளைப்பு நடாத்தப்பட்டது. இதில் 60 உறைகள் அடங்கிய 1800 கிலோ உலர்ந்த மஞ்சளுடன் இவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் விஷேட புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய கற்பிட்டி பொலிஸாருடன் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கப்பலடி கடற்கரைப் பகுதியில் லொறியொன்றுக்குள் மஞ்சள் பொதிகளை ஏற்ற முற்பட்ட வேளையில், சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மஞ்சள் பொதிகள், சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளில் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கற்பிட்டி வன்னி முந்தல் பகுதியைச் சேர்ந்தவரெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றபட்ட மஞ்சள் பொதிகள் கட்டுநாயக்க சுங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட உள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் மஞ்சளை கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட சிறிய ரக லொறி என்பவற்றை கற்பிட்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கின் குரல்



## மக்களின் ஆதரவுடன் இவ்வருடமும் அபிவிருத்திப் பணிகள் தொடரும்

### பொதுஜனப் பெரமுன மட்டு அமைப்பாளர்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

கிராமிய மட்டத்தில் கட்சித் தொண்டர்கள், ஆதரவாளர்களின் ஒத்துழைப்புக்களுடன் இதுவரையில் முன்கொண்டு செல்லப்பட்ட அபிவிருத்திப் பணிகளைப் போன்று இவ்வருடமும் அதனை மேற்கொள்ள வேண்டும். அதற்காக என்னால் முடிந்தவரை அரசாங்கத்தைப் பயன்படுத்தி வேண்டிய அபிவிருத்திப் பணிகளை கட்சியின் தொண்டர்கள், ஆதரவாளர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்வேன். என ஸ்ரீ லங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் ப.சந்திரகுமார் தெரிவித்தார்.

பிறந்துள்ள 2022ஆம் ஆண்டினை வரவேற்கும் முகமாக ஸ்ரீ லங்கா பொதுஜனப் பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பரமசிவம் சந்திரகுமாரின் தலைமையில் ஸ்ரீ லங்கா பொதுஜனப் பெரமுன மட்டக்களப்பு மாவட்ட காரியாலயத்தில் புத்தாண்டை வரவேற்கும் நிகழ்வு சுபிட்சமிகு எதிர்காலத்திற்கான பயணத்தில் ஓரணியில் திரள்வோம் எனும் தொனிப்பொருளின் கீழ் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீ லங்கா பொதுஜனப்பெரமுன கட்சியின் வெற்றிக்காக பாடுபட்ட கட்சியின் முக்கிய பிரமுகர்கள் ஆதரவாளர்கள் உள்ளிட்ட பலரும் இதன்போது பங்கேற்றிருந்தனர். இதன்போது கலந்து கொண்டிருந்தவர்கள் பரஸ்பர புத்தாண்டு வாழத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

இதன்போது கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

இந்த ஆண்டில் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன. மக்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப உரிய காலத்தில் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். இதுவரையில் தனது தலைமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் உழமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதுபோல் இவ்வருடமும் அனைவரினதும் ஒத்துழைப்புக்களை எதிர்பார்க்கின்றேன் என்றார்.

## ஒரே முச்சக்கர வண்டி ஆறு பேரை மோதி விபத்து

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலையில் ஒரே முச்சக்கர வண்டி மூன்று இடங்களில் விபத்தை ஏற்றப்படுத்தி தப்பிச் செல்ல முயற்சித்த வேளையில் மின் கம்பம் ஒன்றுடன் மோதியதில் அறுவர் படுகாயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நகர பகுதியில் நேற்று முன்தினம் (01) இரவு இடம்பெற்றுள்ளது

விபத்து தொடர்பில் தெரியவருவதாவது,...

நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் திருகோணமலை டொக்யார்ட் வீதியில் விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக நடந்து சென்ற ஒருவர் உடன் மோதி அங்கிருந்து தப்பிச்சென்று மீண்டும் திருகோணமலை பிரதான பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக மோட்டார் சைக்களில் பயணித்த மூவருடன் மோதியதில் முச்சக்கர வண்டி கவிழ்ந்துள்ளது பின்னர் பொது மக்களினால் முச்சக்கரவண்டியை நிமிர்த்தி அதன் பிற்பாடு அங்கிருந்து தப்பிச் சென்ற முச்சக்கர வண்டியின் சாரதி திருகோணமலை பிரதான வீதியில் மின் கம்பம் ஒன்றுடன் மோதிய நிலையில் பொதுமக்களினால் மடக்கி பிடித்து பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்

இவ்விபத்தில் ஆறு பேர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பில் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை கடற்கரை பள்ளிவாசல்; நாளை 200வது கொடியேற்ற விழா



**பெரியநீலாவணை விசேட நிருபர்**

கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகையின் 200வது கொடியேற்ற விழா நாளை 04ம் திகதி ஆரம்பமாக உள்ளது.

200வது கொடியேற்ற விழாவினை இம் முறை சிறப்பாக நடாத்துவதற்கு பள்ளிவாசல் நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதற்கமைய கொரோனா சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பொது மக்கள் ஒத்துழைப்பினை வழங்குமாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் வழிகாட்டலில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ. ஆர் . எம் . அஸ்மி வழிகாட்டல்களை வழங்கியுள்ளார். இந்நிலையில் குறித்த பள்ளிவாசல் நிர்வாகத்தினர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.



புத்தாண்டை வரவேற்கும் விசேட பூஜை வழிபாடுகள் அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது. பூஜையில் பக்தர்கள் கலந்து கொண்டு இறைவழிபாட்டில் ஈடுபட்டபோது,... படம்: வாச்சிக்குடா விஷேட நிருபர்

## மட்டக்களப்பு வாவியிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

**புதிய காத்தான்குடி தினகரன். நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு வாவியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிசார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி பகுதியில் அமைந்துள்ள மட்டக்களப்பு வாவியில் தோணி ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மீன் பிடித்துக்கொண்டிருந்த சமயம் தோணி ஆற்றினுள் கவிழ்ந்து இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதனிடையே, தோணி விபத்தில் ஆற்றினுள் வீழ்ந்த ஒருவர் தெய்வாதீனமாக உயிர்தப்பியதுடன் மற்றைய நபர் ஆற்றில் காணாமல் போன நிலையில் சடலமாக மீட்க்கப்பட்டுள்ளார்.சடலமாக மீட்கப்பட்டவர் களுவாஞ்சிகுடி நாவலடி வீதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## காரைதீவில் புத்தாண்டன்று விபத்து: சிறுமி பலத்த காயம்

**காரைதீவு குறூப் நிருபர்**



அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியில் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிந்தவூர் வெட்டு வாய்க்கால் காரைதீவு எல்லையில் முச்சக்கர வண்டியுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் சிறுமி ஒருவர் பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

இச்சம்பவம் புத்தாண்டன்று மாலை இடம்பெற்றுள்ளது. இதன் போது கல்முனை நேக்கி வந்த முச்சக்கர வண்டி (ஆட்டோ) மற்றும் அக்கரைப்பற்றை நோக்கி வந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது.

## வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சேவைநலன் பாராட்டு விழா

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

வீதி அபிவிருத்தி அதிகாரசபை காரியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்கள் மற்றும் பதவியுயர்வு பெற்றவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சம்மாந்துறை வேலைத்தள காரியாலயத்தில் பொறியியலாளர் இஸட்.ஏ. முஹம்மட் அஸ்மீரின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கிழக்கு மாகாண காரியாலயத்தின் மேலதிக பணிப்பாளராக அண்மையில் நியமனம் பெற்ற பொறியியலாளர் எம்.பி.எம். அலியார், கல்முனை பிராந்திய நிறைவேற்று பொறியியலாளராக இருந்து அக்கரைப்பற்று காரியாலய பிரதம பொறியலாளராக பதவியுயர்வு பெற்ற பொறியியலாளார் ரீ. சிவசுப்ரமணியம், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கிழக்கு மாகாண காரியால நிர்வாக உத்தியோகத்தராக இருந்து ஓய்வுபெற்ற டவ்லியு அசோகா மல்காந்தி போன்றோர்கள் இந்நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிராந்திய காரியாலய உத்தியோகத்தர்களினால் கௌரவிக்கப்பட்டனர்.

## மருதமுனை பிரதேச வைத்தியசாலை மீண்டும் வழமையான சேவைக்கு

**பெரியநீலாவணை விசேட, மருதமுனை நிருபர்கள்**

கொரோனா சிகிச்சை நிலையமாக செயற்பட்ட மருதமுனை பிரதேச வைத்தியசாலையில் மீள பொது மக்களுக்கான சேவையை ஆரம்பிக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக இடம்பெற்றது.

வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.எம்.மிஹ்லார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர். எம். தௌபீக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வைத்தியசாலையை திறந்து வைத்தார்.

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை தீவிரமாக அதிகரித்ததை அடுத்து கல்முனைப் பிராந்தியத்தின் சில வைத்தியசாலைகள் கடந்த வருடம் கொரோனா தொற்றாளர்களை பராமரிக்கும் நிலையங்களாக மாற்றப்பட்டது.



மருதமுனை பிரதேச வைத்தியசாலையும் கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் மத்திய நிலையமாக மாற்றப்பட்டு கிழக்கு பக்கமாக இருக்கின்ற சுகாதார பராமரிப்பு நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

எனினும் தற்போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து சுமுகமான நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து மருதமுனை பிரதேச வைத்தியசாலையின் சேவைகளை மீள ஆரம்பித்து வைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

## அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் 04வது சத்திர சிகிச்சைக் கூடம்

**ஒலுவில் விசேட நிருபர்**



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் 04வது சத்திர சிகிச்சைக் கூடம் சனிக்கிழமை (01) புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதிதாக திறந்து வைக்கப்பட்ட சத்திர சிகிச்சை கூடத்தினூடாக, இப்பிராந்திய பொது மக்களின் அதிகரித்து வரும் சத்திர சிகிச்சை தேவையை பூர்த்தி செய்ய முடியுமென, வைத்தியசாலையின் திட்டமிடல் அபிவிருத்தி பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஆகில் அஹமட் ஷரீபுதீன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஆஸாத் எம் ஹனீபா புதிய சத்திர சிகிச்சை கூடத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் விசேட வைத்திய நிபுணர்கள், சிரேஷ்ட வைத்தியர்கள், தாதிய பரிபாலகர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 'வளம்மிகு மண்டூர்' நூல் வெளியீடு



**மட்டக்களப்பு விசேட நிருபர்**

சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூசணம் இ.பாக்கியராஜா எழுதிய வளம்மிகு மண்டூர் நூல்வெளியீட்டு விழா மட்டக்களப்பு கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவன ப.சந்திரசேசரம் அரங்கில் நேற்று (02) நடைபெற்றது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வு பேராசிரியர் செ.யோகராசா தலைமையில் நடைபெற்றபோது கல்லடி இராமகிருஷ்ண மிசன் பொது முகாமையாளர் தக்ஷஜானந்தா மகராஜ் ஆன்மீக அதிதியாகக் கலந்து கொண்டு முதற் பிரதியை வைத்தியக் கலாநிதி தி.சிவசீலனுக்கு வழங்கி வெளியிட்டு வைத்தார்.

நிகழ்வின் பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்தியக் கலாநிதி வி.விவேகானந்தராஜாவும், சிறப்பு விருந்தினராக போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் இ.இராகுலநாயகியும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.நூலாசிரியர் இ.பாக்கியராஜா ஏற்புரையையும் நன்றியுரையையும் நிகழ்த்தினார்.

## வறிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக 85 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு

### இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

2022 ஆம் ஆண்டில் வறிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மாத்திரம் 85 ஆயிரம் மில்லியன் நிதி எமது அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மட்டக்களப்பில் வெள்ளிக்கிழமை (31) இடம்பெற்ற நிகழ்வில் தெரிவித்துள்ளார்.

சுபீட்சத்தின் பால் நாட்டை கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மற்றும் மனைசார் கால்நடை வளர்ப்பு, சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறுபட்ட வாழ்வாதார உதவி திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டம் பூராகவும்





வழங்கப்பட்டுவரும் நிலையில் மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மக்களுக்கான பல்வேறுபட்ட உதவித்திட்டங்களை வழங்கும் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் பிரதம அதிதியாக பங்கேற்றிருந்ததுடன், உதவித்திட்டங்களையும் வழங்கி வைத்தார்.

இதன் போது தனிநபர் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஆடுகள் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட 59 பயனாளிகளுள் இரண்டாம் கட்டமாக 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆடுகள் உள்ளிட்ட மருந்து வகைகள் 17 பயனாளிகளுக்கும், வீடு திருத்தம் செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட 12 பயனாளிகளுக்கு 24 இலட்சம் பெறுமதியான காசோலைகளும், மலசலகூட வசதியற்ற 18 பயனாளிகளுக்காக 1,260,000 ரூபாய்

பெறுமதியான காசோலைகளும் இதன்போது இராஜாங்க அமைச்சரினால் வழங்கி வைக்கப்பட்டதுடன், மின் இணைப்பு அற்ற வறிய குடும்பங்களிற்கு மின் இணைப்பை பெற்றுக்கொள்வதற்காக 18 பயனாளிகளுக்கு 4,20,000 ரூபாய் பெறுமதியான காசோலைகளும்,

3 மைதானங்களின் புனரமைப்பிற்காக 15 இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் பெறுமதியான காசோலைகளும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

# கிழக்கில் தமிழர் பிரதேசங்களை பறிகொடுக்க நாம் தயாரில்லை!



## 'எமது தமிழ் அரசியல் தலைவர்கள் 72 வருடமாக இணக்க அரசியல் செய்து கொண்டிருப்பதால் கிழக்கு தமிழ் மக்களுக்கு பலவிதத்திலும் பாதிப்புகள்' என்கிறார் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

யுத்த காலத்தில் தமிழ் அரசியல்வாதிகள், நிர்வாகம் சார்ந்தவர்கள் பேசுவதற்கே அச்சப்பட்டனர். அக்காலத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களுக்கு அரசாங்கத்திலிருந்த செல்வாக்கை வைத்துக் கொண்டு பல விடயங்களை நிறைவேற்றினார்கள்.அதிலொன்றுதான் இந்த பண்ணம்பலான அறிக்கையாகும். அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பில் உள்ள இராஜாங்க அமைச்சரின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த புத்தாண்டில் மக்களின் வாழ்வு செழிக்க பிரார்த்திக்கின்றேன். தனியார் தொலைக்காட்சியின் தீர்வு நிகழ்ச்சியில் பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட் மட்டக்களப்பு மாவட்ட அரச நிர்வாகத்தினை 'அரச பயங்கரவாதம்' என்று கூறி மிக மோசமான முறையில் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்து சாடியிருந்தார். சில பிரதேச செயலகங்கள் தொடர்பாகவும் கருத்துகளை முன்வைத்திருந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் தொடக்கம் உதவி அரசாங்க அதிபர்,பிரதேச செயலாளர்கள் உட்பட பலர் நிர்வாக பயங்கரவாதத்தினை மேற்கொள்வதாக கூறியிருந்தது மிகவும் கண்டிக்கத்தக்க விடயம். அந்த விடயம் தொடர்பில் அவர் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும். பாராளுமன்றத்தில் கூட அவர் நிர்வாக பயங்கரவாதம் என்று கூறியிருந்தார். அதனை தொடர்ந்து பொதுவெளியில் தனியார் தொலைக்காட்சியொன்றின் நிகழ்ச்சியின் போதும் இவ்வாறான கருத்துகளை தெரிவித்துள்ளார். காணிக்கு பொறுப்பான மேலதிக அரசாங்க அதிபரின் பெயரைக் குறிப்பிட்டு காணிகளை அபகரிப்பதாகவும் முஸ்லிம்களுக்கு வழங்க மறுப்பதாகவும் குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். அவரை நிர்வாக பயங்கரவாதியாக சுட்டிக் காட்டியிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

கடந்த 2018ஆம் ஆண்டுதான் அவர் மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் அவரை 12வருடங்களாக இவ்வாறான செயற்பாடுகளில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் ஈடுபடுவதாக குறிப்பிட்டிருந்தார். அவர் உண்மைக்கு புறம்பான கருத்துகளை தெரிவித்திருந்தார். அவர் எந்தவித இனவாதமோ,மதவாதமோ இன்றி செயற்படும் ஒரு நிர்வாக அதிகாரி. மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் அடித்து விரட்டி காணிகளை அபகரித்தாக கூறியிருந்தார். எந்த பாரபட்சமுமின்றி அரச நிர்வாகத்தினை மேற்கொள்கின்ற மாவட்ட நிர்வாகத்தினை இவ்வாறு கூறியிருப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. உண்மைக்கு புறம்பான விடயங்களை பேசுவது வேதனைக்குரிய விடயம்.

சந்திரிகா பண்டாரநாயக்க காலத்தில் கொண்டுவரப்பட்டது பண்ணம்பல அறிக்கையாகும்.அது வர்த்தமானியல்ல.முன்னாள் அமைச்சர் அஷ்ரப் இது தொடர்பான பிரேரணையொன்றையும் கொண்டுவந்திருந்தார்.அந்த காலப் பகுதியில் கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.கோறளைப்பற்று மத்தி எட்டு கிராம சேவையாளர் பிரிவுடன் உருவாக்கப்பட்டது.

பண்ணம்பல அறிக்கையென்பது யுத்தகாலத்தில் செய்யப்பட்ட ஒன்றாகும். அந்தக் காலத்தில் ஆளுந்தரப்பில் அதிகாரமிக்கவர்களாக முஸ்லிம் அமைச்சர்கள் இருந்த காலகட்டம். அக்காலத்தில் தமிழ் அரசியல்வாதிகள், நிர்வாகம் சார்ந்தவர்கள் பேசுவதற்கே அச்சப்பட்ட காலகட்டம். அக்காலத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள் தாங்கள் அரசாங்கத்திலிருந்த செல்வாக்கினை வைத்துக்கொண்டு இவ்வாறான விடயங்களை நிறைவேற்றினார்கள்.அதிலொன்றுதான் இந்த பண்ணம்பலான அறிக்கையாகும். அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் புனானை கிழக்கு பகுதியும் காராமுனையும் உள்ளன.அதன் நிர்வாகத்தையும் வாகரை பிரதேச செயலகம் முன்னெடுத்து வருகின்றது. இதனை கோறளைப்பற்று மத்தியுடன் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையினை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுக்கின்றனர். புணானை கிழக்கு பிரதேசம் கோறளைப்பற்று வடக்கில் இருந்தாலும் ரிதிதென்ற போன்ற சில கிராமங்களில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் நிர்வாகம் செய்கின்றது.அதேபோன்று பல தமிழ்க் கிராமங்கள் அதில் உள்ளன. கோறளைப்பற்று மத்தியுடன் இணைக்க வேண்டும் என கூறும் பல பகுதிகள் முழுக்க முழுக்க தமிழர்கள் வாழும் பகுதி. தமிழ் பகுதிகளையெல்லாம் இணைத்து கோறளைப்பற்று மத்தியுடன் இணைக்க வேண்டும் என்பது எந்த வகையில் நியாயம்? மயிலங்கரச்சி கோறளைப்பற்று மத்தியில் காணப்படும் தமிழ்க் கிராமமாகும்.அப்பகுதி மக்கள் தங்களுக்கு கோறளைப்பற்று மத்தியுடன் நிர்வாக ரீதியாக இருக்க விருப்பம் இல்லையென்று கடிதம் தந்துள்ளார்கள்.

இதேபோன்று ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட சில பகுதிகளின் நிர்வாகத்தினை ஏறாவூர் நகர் பிரதேச செயலகம் முன்னெடுக்கின்றது. அதனையே மயிலங்கரைச்சி மக்கள் கோருகின்றனர்.

தியாவட்டுவான் இன்றும் கோறளைப்பற்று மத்தியுடனேயே உள்ளது.ஆனால் அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அது கோறளைப்பற்று வடக்குடன் உள்ளதாக கூறுகின்றார்.இது கூட தெரியாதவராகவே அவர் இருக்கின்றார்.பொறுப்பு வாய்ந்த ஒரு கட்சியின் தலைவர் தியாவட்டுவான் கிராம சேவையாளர் பிரிவு எங்கு இருக்கின்றது என்று கேட்டு தெரிந்தாவது பேசியிருக்க வேண்டும். நிலத்தொடர்பு இல்லாமல் மட்டக்களப்பில் அரச நிர்வாகம் முன்னெடுக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கூறியிருந்தார். நிலத்தொடர்பு பற்றி பேசுவதற்கு இவர்களுக்கு எந்த அருகதையுமில்லை.

மட்டக்களப்பில் உள்ள நான்கு கல்வி வலயங்கள் புவியியல் ரீதியாக நிலத்தொடர்புடன் அமைக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கையிலேயே முதன்முறையாக புவியியல் தொடர்பு இல்லாமல் முதன் முறையாக கல்வி வலயம் ஒன்றை உருவாக்கி காட்டியவர்கள் இவர்கள்தான். முஸ்லிம் பகுதிகளை இணைத்து நிலத்தொடர்பற்ற நிலையில் ஒரு கல்வி வலயம் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த 72 வருடமாக எமது தமிழ் அரசியல் தலைவர்கள் இணக்க அரசியல் என்று சென்று கொண்டிருப்பதனால் கிழக்கு மாகாணத்தில் நில ரீதியாக,வளரீதியாக,பொருளாதார ரீதியாக மோசமான பாதிப்பினை தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ளனர். கோறளைப்பற்று மத்தியுடன் 240 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு இணைக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.இந்த நிலப்பரப்பு எங்குள்ளது? வாகரையின் அரைவாசிப் பகுதியை இணைக்க வேண்டும் என்ற நோக்குடனேயே இவர்களின் செயற்பாடுகள் உள்ளன. தமிழர்களின் பாரம்பரிய கிராமங்களை கோறளைப்பற்றுடன் இணைக்க வேண்டும் என்கின்ற பண்ணம்பல அறிக்கையினை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அதில் எந்த விட்டுக்கொடுப்புகளுக்கும் தயாரில்லை. நீங்கள் ரிதிதென்ன,ஜயந்தியாய பகுதிகளை கோறளைப்பற்று மத்தியில் நிர்வாகம் செய்கின்றீர்கள்.ஆனால் அங்கிருக்கின்ற எட்டுக் கிராமங்களில் ஆறு கிராமங்கள் நூற்றுக்கு நூறு வீதம் தமிழ்க் கிராமங்களாகும். இவற்றை நாங்கள் எந்த வகையிலும் விட்டுக்கொடுப்பதற்கு தயாரில்லை.மக்களும் அதனை விரும்ப மாட்டார்கள். 240சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு என இவர்கள் சொல்வது கிட்டத்தட்ட வாகரை பாரம்பரிய தமழர்களின் கிராமங்களை இல்லாமல் செய்கின்ற ஒருவகையான செயற்பாடாகும்.

இப்படித்தான் நாங்கள் அம்பாறையிலும் திருகோணலையிலும் பலவற்றை இழந்தோம். இது பேசித் தீர்க்க வேண்டிய விடயமல்ல, அதற்கு அவசியமும் இல்லை. இது எங்களுக்கென்றே இருக்கின்ற விடயமாகும். விட்டுக்கொடுத்து விட்டுக் கொடுத்து நாங்கள் நிலரீதியாகவும் வள ரீதியாகவும் குறைந்து கொண்டே செல்கின்றோம்.

கோறளைப்பற்று மேற்கு, மத்தியில் உள்ள சில முஸ்லிம் நபர்கள் அரசியல் செல்வாக்குடன் அத்துமீறி அரச காணிகளை அபகரித்துள்ளனர். இன்று ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகம் ஏறாவூர் நகருக்குரிய பிரதேச செயலகத்திற்குள் சென்று நிர்வாகம் செய்யவில்லை. மண்முனைப்பற்று பிரதேச செயலகம் காத்தான்குடிக்குள் நிர்வாகம் செய்யவில்லை.ஆனால் இன்று காத்தான்குடி நகரசபை ஆரையம்பதிக்கும் வரி அறவிடுகின்றது. ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் ஏறாவூர் நகர் பிரதேச செயலகம் நிர்வாகம் செய்கின்றது.

எங்களிடம் இனவாத நோக்கமில்லை.முஸ்லிம் மக்களுக்குரிய நீதியான நியாயமான விடயங்களை நாங்கள் தட்டிப்பறிக்கவும் இல்லை,தட்டியெடுக்கவுமில்லை.அதற்காக தமிழ் மக்களின் நீதியான நியாயமான கொடுக்கப்பட வேண்டிய விடயங்களை யாருக்கும் விட்டுக்கொடுக்க தயாரில்லை. அதில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் நாம் தயாரில்லை.இதேபோன்று கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட வடமுனை, ஊத்துச்சேனை,புனானை மேற்கு, வாகனேரி,கள்ளிச்சேனை இந்த ஐந்து கிராமங்களுடன் 18கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டதாக கிரான் பிரதேச செயலாளர் பிரிவு உள்ளது.ஆனால் இவர்கள் இந்த ஐந்து கிராமங்களையும் கோறளைப்பற்று மேற்குடன் இணைக்க வேண்டும் என்று கோருகின்றனர்.

கள்ளிச்சை பிரச்சினை தீர்க்கப்பட்ட விடயமாகும்.கள்ளிச்சையென்பது கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு பின்தங்கிய பகுதியாகும்.அங்கிருந்த முஸ்லிம் மக்கள் ரிதிதென்ன மற்றும் ஜெயந்தியாய ஆகிய பகுதிகளில் காணிகள் வழங்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டனர். ரிதிதென்ன மற்றும் ஜெயந்தியாய மகாவலிக்குரிய காணியாகும். இப்பகுதியில் முன்னாள் அமைச்சர் ஹிஸ்புல்லாவினால் இடமாற்றம் செய்யப்பட்டனர். மீள்குடியேற்றம் இல்லை, இடமாற்றம் செய்யப்பட்டனர்.அனைத்து வசதிகளுடன் அவர்கள்இடமாற்றம் செய்யப்பட்டனர்.இன்று கள்ளிச்சை பகுதி மக்கள் துரத்தப்பட்டார்கள் என்ற பொய்யான பிரசாரங்களை முன்னெடுத்துள்ளனர்.இந்த விடயத்தில் பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபரை இனவாதியாக காட்டமுற்படுவது ஏற்றுக் கொள்ள முடியாது.

கிழக்கு மாகாணத்தினை தனி முஸ்லிம் மாகாணமாக மாற்ற வேண்டும்.கிழக்கிஸ்தான் என்ற வகையில் அடையாளப்படுத்த வேண்டும் என்று தூரநோக்குடனான செயற்பாடுகளை முஸ்லிம் அரசியல்வாதிகள் முன்னெடுத்து வருகின்றனர்.இது தெரியாமல் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு சில அரசியல்வாதிகள் இணக்க அரசியல் என்ற பெயரில் வந்ததன் காரணமாகவே பல்வேறு இழப்புகளை இந்த சமூகம் எதிர்கொண்டது.

காத்தான்குடி,ஏறாவூர்,ஓட்டமாவடி ஆகிய மூன்று பிரதேசத்தில் ஒருகுறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் மட்டுமே முஸ்லிம்கள் அடைக்கப்பட்டுள்ளதாகவும், வேறு பகுதிகளில் முஸ்லிம் மக்கள் இல்லையெனவும் பொய்யான கருத்துகளை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றனர். இன்று காத்தான்குடி நகரசபையில் ஒரு தமிழ் உறுப்பினர் இல்லை.ஆனால் ஏறாவூர்ப்பற்று, மண்முனைப்பற்று, மட்டக்களப்பு மாநகரசபை, வாழைச்சேனை, வாகரை ஆகிய பிரதேசசபைகளில் 18முஸ்லிம் உறுப்பினர்கள் உள்ளனர்.காத்தான்குடி,ஏறாவூர்,ஓட்டமாவடி ஆகிய பிரதேசத்திற்குள் மட்டும் முஸ்லிம் மக்கள் இருப்பது என்றால் இந்த 18 உறுப்பினர்களும் எவ்வாறு வந்தார்கள்?தவறான கருத்துகளை தெரிவித்து வருகின்றார்கள்.

இன்று ஓட்டமாவடி பிரதேசசபை இருப்பது தமிழர்களின் மயான காணியில். இதேபோன்று காளிகோவிலை உடைத்து ஓட்டமாவடி மீன் சந்தையைக் கட்டினேன் என ஹிஸ்புல்லா தெரிவித்திருந்தார்.மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் பதவியை பயன்படுத்தி இதனைச்செய்ததாக கூறுகின்றார்.அதற்காக நீதிபதியையே மாற்றினேன் என்று கூறுகின்றார். வட கிழக்கினை இணைத்தால் இரத்த ஆறு ஓடும் என்று கூறுகின்றார். இது என்ன பயங்கரவாதம் என்பதை கேட்க விரும்புகின்றேன்.

க.விஜயரெத்தினம்...
(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

# 'அருள் பொழியும் நிழல் பாதைகள்' ; ஜேம்ஸ் ஆலனின் நூல் தமிழ்மொழியில்

1901 இல் ஜேம்ஸ் ஆலனின் முதல் நூலாக *From Poverty to Power* என்ற நூல் வெளியாகி, அவரது பெயரை நிலை நிறுத்தியது. இந்நூல் பன்னூறு பதிப்புகளைக் கண்டது. ஜேம்ஸ் ஆலன் தீவிரஆழ்ந்த வாசகராக இருந்தார். ஷேக்ஸ்பியர், மில்டன், எமர்சன், பிறவுனிங், வால்ட் விட்மன் ஆகியோரின் கவிதைகள் அவருக்கு மனப்பாடம். பகவத்கீதை, லாவோட்சு, புத்தரின் தம்மபோதம், பைபிள் ஆகிய நூல்களை அவர் ஆழ்ந்து கற்றார். வானவியல், கூர்ப்புக் கோட்பாடு, தாவரவியல், புவிச் சரிதவியல் ஆகியவற்றிலும் அவர் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார்.

1905இல் தென் வேல்ஸில் லில்லி என்ற பெண்மணியைக் காதல் திருமணம் செய்து கொண்டார். 1903ஆம் ஆண்டு Ilfracombe என்ற இங்கிலாந்தின் தென் மேற்குக் கடலோரம் அமைந்திருந்த அழகிய சிறிய சுற்றுலாத்தலம் போன்ற ஓரிடத்திலேயே தனது வாழ்க்கையைக் கழித்தார்.

கடலை நோக்கிய விக்டோரியன் கால ஹோட்டல்களும், மலைக் குன்றுகளும், வளைந்து போகும் தெருக்களுமாய் அழகு சிந்திய அந்தச் சிறுநகர் அவருக்கு அமைதியை அள்ளி வழங்கியது. ரஷ்யப் பெரும் சிந்தனையாளன் லியோ டால்ஸ்டாய், ஜேம்ஸ் ஆலனின் வாழ்க்கை இலட்சியத்தின் ஆதர்சமாகத் திகழ்ந்தார். விரும்பித் தேர்ந்துகொண்ட வறுமை, உடல் உழைப்பு, யோகியின் சுய ஒழுக்கம் என்பன டால்ஸ்டாயிடமிருந்து அவர் பெற்றவை.

ஏல்பிறகூம் நகரில் இருந்த ஒன்பது ஆண்டுகளில் அவர் பத்தொன்பது நூல்களை எழுதி வெளியிட்டிருந்தார். இக்காலத்தில் ஆண்டிற்கு இரண்டு நூல்கள் என்று எழுதியிருக்கிறார்.



1912ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி பகல் ஒரு மணி அளவில் தனது நாற்காலியில் இருந்தவாறு, தனது இனிய மனைவியை நோக்கி, 'என் வாழ்வு முடிந்து விட்டது' என்று முகத்தில் நேசம் பொங்கி வழிய, கருணை சிந்தும் விழிகளுடன் தன்னையும் மகள் நோராவையும் அணைத்த வண்ணம் கண்களை மூடிய அந்தக் கணங்களை எனது பேனையால் எவ்வாறு விபரிப்பேன்? என்று கண்களில் கண்ணீர்மல்க ஜேம்ஸ் ஆலனின் நினைவுக் குறிப்பை எழுதியிருக்கிறார் லில்லி.

சுயமுன்னேற்ற நூலாக ஜேம்ஸ் ஆலனின் நூல்கள் உலகெங்கும் பரவின. பல்வேறு எழுத்தாளர்களின், சிந்தனையாளர்களின் மீது அவை ஆதிக்கம் செலுத்தின. பைபிளையும் பௌத்தத்தையும் இணைத்து அவர் சிந்தித்தார். எல்லோரும் இன்புற்றிருக்கும் வழியினைத் தேடினார்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்றார். ஒரு பொல்லாப்பும் இல்லை என்றார். இனியன நினைத்தல் வேண்டும் என்றார். அல்லல் அறுக்கும் வழி சமைத்தார்.

அந்த ஞானியின் நூல்கள் தமிழில் நூறு ஆண்டுகளாக மொழிபெயர்ப்பில் வந்திருக்கின்றன என்பது வியப்பூட்டும் செய்தியாகும். செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. அவர்கள் சிறையிலிருந்தவாறு, ஜேம்ஸ் ஆலனின் *As a Man Thinketh* என்ற நூலை, 'மனம் போல் வாழ்வு' என்று தலைப்பில், 25.7.1930 ஆம் திகதியிட்டு, கோவிற்பட்டியிலிருந்து வெளியிட்டிருக்கிறார். வ.உ.சி. அவர்கள் மொழிபெயர்த்த ஜேம்ஸ் ஆலனின் 'மனம் போல் வாழ்வு', 'அகமே புறம்', 'சாந்திக்கு மார்க்கம்' ஆகிய நூல்களைப்பற்றி மு.வரதராசன் அவர்கள் கூறும்போது, 'உயர்ந்த மெய்யுணர்வுக் கருத்துகளைச் செறிவான தமிழ் நடையில் புலப்படுத்தும் நூல்கள்' என்று குறிக்கிறார்.



1956இல் ஜேம்ஸ் ஆலனின் *From Poverty to Power* என்ற நூலினை, பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை 'திருநிறை ஆற்றல்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்திருக்கிறார். வ.உ.சி., கா.அப்பாத்துரை ஆகியோருக்குப் பின் ஜேம்ஸ் ஆலனின் சிந்தனைகளை மொழிபெயர்த்தும், அவற்றை அடிப்படையாகக் கொண்டு நூல்களை எழுதியும், அவருக்கு தற்காலத்தில் பெரும்புகழ் தேடிக்எகொடுத்தவர் டொக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி ஆவார்ரத்தைத் தொட்டு, அதை அன்றாட உலகில் வாழ, வழிமுறைகளைச் சொல்லிக்கொடுப்பவர் ஜேம்ஸ் ஆலன்.

நம் காலத்தில் ஜேம்ஸ் ஆலனின் நூல்கள் அனைத்தையும் மொழிபெயர்த்து வெளியிடுவதை ஒரு வேள்வி போன்ற அர்ப்பணத்தோடு செய்து வருபவர் சே. அருணாசலம் ஆவார். 'மனிதர்களும் அமைப்புகளும்', 'மகிழ்ச்சிக்கும் வெற்றிக்குமான அடித்தளம்', 'மனிதன்: மனம், உடல், சூழ்நிலையின் தலைவன்', 'வாழ்வின் கொந்தளிப்புகளை கடந்த உயர்நிலைகள்', 'உள்ளத்திலிருந்தே வாழ்வு', சுவர்கத்தின் நுழைவாயில், சுவர்க வாழ்வின் தன்மைகள்', 'அருள் பொழியும் நிழல் பாதைகள்' ஆகிய நூல்களை சே. அருணாசலம் ஒரு தவம்போலவே தொடர்ந்து மொழிபெயர்த்து வருகிறார்.

அவரது மொழிபெயர்ப்பில் ஜேம்ஸ் ஆலனின் *Byways of Blessedness* என்ற நூலின் சில பகுதிகள் இங்கு 'அருள்பொழியும் நிழல் பாதைகள்' என்ற தலைப்பின் கீழ் வெளியாகின்றன. ஆங்கில தமிழ் மொழிபெயர்ப்பு சே.அருணாசலம் அவர்களுக்கு இதமாக வாய்த்திருக்கிறது.

அருள்பொழியும் நிழல் பாதைகள் என்ற தொடர் தமிழின் வடிவத்தில் அழகாக விழுந்திருக்கிறது. நெருடல் இல்லாத, சரளமான நடை இலகுவான வாசிப்பிற்கு இடம் தருகிறது.

இந்த வெளியீட்டிற்கென்றே தனது மொழிபெயர்ப்பை மீண்டும் செப்பனிட்டுத் தந்திருக்கிறார் சே.அருணாசலம் அவர்கள். காலத்தின் தேவை அறிந்து, தனது மொழியாக்கத்தைப் பூரணமாகப் பயன்படுத்திக்கொள்ள அவர் இசைந்திருப்பது அவரின் விசாலமான மனதை வெளிப்படுத்துகிறது. அவருடைய அனைத்து மொழியாக்கங்களையும் இலவசமாகத் தரவிறக்கம் செய்து வாசிக்க *Creative Commons Attribution* அமைப்பினர் ஒழுங்குகள் செய்துள்ளனர்.

மு.நித்தியானந்தன் ...
லண்டன்




# மலையக கட்டுமான தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்காது பணிநீக்கம் செய்த தனியார் நிறுவனம்

## அடாவடித்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த செந்தில் தொண்டமான்





மலையகத்திலிருந்து கட்டுமான பணிக்காக கொழும்பில் உள்ள நாவல பிரதேசத்தில் தனியார் கம்பனிக்கு தொழில் புரிய சென்ற 15யிற்கும் மேற்பட்ட மலையக கட்டுமான தொழிலாளர்கள் பம்பலபிட்டியில் உள்ள கட்டுமான பணியகத்தில் பணியில் ஈட்டுபட்டிருந்தனர். அவர்களுடைய வேலையை நிறைவு செய்த பின்,தனியார் நிறுவனம் சம்பளத்தை வழங்க மறுப்பு தெரிவித்தையடுத்து, தொழிலாளர்களுக்கும் தனியார் நிறுவனத்தினருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இம் முறுகல் நிலை காரணத்தினால் தொழிலாளர்கள் சம்பளம் இன்றி இரவோடு இரவாக பணி நீக்கம் செய்யப்பட்டனர். இதனையடுத்து தலைநகர் கொழும்பில் தொழிலாளர்கள் உணவின்றி நிர்க்கதிக்குள்ளாகினர். இச்சம்பவம் குறித்து தொழிலாளர்கள் முன்னெடுத்த முறைப்பாடுகளுக்கு எவ்வித தீர்வும் எட்டப்படாத நிலையில் இது குறித்து இ.தொ.காவின் உப தலைவரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு தொழிலாளர்களால் கொண்டுவரப்பட்டது.

செந்தில் தொண்டமான் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தினூடாக தனியார் நிறுவனத்தின் மீது வழக்கு பதிவு செய்ய நடவடிக்கையெடுக்கப்பட்டதுடன் மேலும் இந்த பிரச்சினை குறித்து தொழில் அமைச்சின் ஊடாக தனியார் நிறுவனத்தின் மீது விசாரணை முன்னெடுக்குமாறு செந்தில் தொண்டமான் பணிப்புரை வழங்கினார்.

இதனையடுத்து செந்தில் தொண்டமானால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு அமைய தனியார் கம்பனி நிர்வாகம் உடனடியாக தொழிலாளர்களை அழைத்து அவர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளத்தை வழங்கியது. மலையகத்தின் பல பிரதேசங்களை சேர்ந்த தொழிலாளர்கள் சம்பளத்தை பெற்றுக்கொண்டு வீடு திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தொற்று பரவலிலும் நோர்வூட் பகுதியில் 06 பாதைகளுக்கு காபட்

## நோர்வூட் பிரதேச சபை தலைவர்

ஹற்றன் விசேட நிருபர்

கொரோனா தொற்று பரவல் காரணமாக நாடு முடக்கப்பட்ட நிலையிலும் கூட நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் ஆறு பாதைகள் காபட் இடப்பட்டுள்ளது.

ஒரு பிரதேசம் அபிவிருத்தி காண வேண்டும் என்றால் பாதை அபிவிருத்தி மிக முக்கியமானது இந்நிலையில் சலங்கந்த என்பீல்ட் பாதை சுமார் 113 இலட்சம் ரூபா செலவில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதற்காக அரசாங்கத்திற்கும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் நன்றி தெரிவிப்பதாக நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் கே.கே. ரவி தெரிவித்தார்.

ஹற்றன் டிக்கோயா சலங்கந்த என்பீல்ட் பிரதான பாதை கடந்த காலங்களில் குண்டும் குழியுமாக காணப்பட்டது. ஐந்தரை கிலோமீற்றர் நீளமான குறித்த பாதையின் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை முதல் கட்டமாக புனரமைக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்..

இன்று நாட்டில் பொருளாதார ரீதியில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றது. ஆனால் நோர்வூட் பகுதியில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து வைத்து இன்று நடைபெற்று வருகிறது. தோட்டப்பகுதியில் ஆயிரம் ரூபா சம்பள பிரச்சினை காணப்படுகின்றது.

எனினும் கம்பனிகளுக்கிடையிலான வழக்கு பிரச்சினை தீர்ந்த உடன் நிச்சயமாக அதற்கான தீர்வினை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பெற்றுக்கொடுப்பார். அத்தோடு மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கான திட்டங்களையும் எதிர்காலத்தில் முன்னெடுப்பார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மத்திய மாகாண வேலையற்ற பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகள் நிரந்தர அரச சேவையில் இணைப்பு

தம்புள்ள தினகரன் நிருபர்

ஜனாதிபதியின் திட்டத்திற்கு அமைய வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகள் 58,116 பேரை அரசாங்க சேவையில் இணைத்துக் கொள்ளும் வேலைத் திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தில் 4,545 பேருக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகேயினால் நேற்று முன்தினம் (01) வழங்கி வைக்கப்பட்டன.

இதனடிப்படையில் கண்டி மாவட்டத்தில் 7,642 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 959 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 944 பேரும் பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களின் பொருட்டு தமது நியமனக் கடிதங்களை ஆளுநரிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

பயிலுனர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தோரில் 2,616 பேர் பாடசாலைகளுக்கும் 705 பேர் அரசதுறை சார் நிறுவனங்களுக்கு 705 பேரும் பயிற்சி பெற்ற குழுவிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆவர்.





மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான அமரர் பெரியசாமி சந்திரசேகரனின் 12 வது சிரார்த்த தின நிகழ்வு நேற்று முன்தினம் பதுளையில் அமைந்துள்ள மலையக மக்கள் முன்னணியின் காரியாலயத்தில் நடைபெற்றது.ம.ம.மு யின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னணியின் செயலாளர் நாயகம் பேராசிரியர் சங்கரன் விஜேசந்திரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.
படம்: நுவரெலியா தினகரன் நிருபர்

# வட்டகொடை மடக்கும்புர தோட்டத்திலுள்ள நீர்தேக்கத்தில் பெண்ணின் சடலம் மீட்பு



ஹற்றன் சுழற்சி நிருபர்

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டகொடை மடக்கும்புர தோட்டத்திலுள்ள மீன்வளர்ப்பு நீர்தேக்கத்தில் பெண்ணின் சடலம் ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட வட்டகொடை மடக்கும்புர தோட்டத்தைச் சேர்ந்த 54 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயான கந்தையா ரமணி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந் நீர்தேக்கத்தில் பெண் ஒருவரின் சடலம் மிதப்பதைக் கண்ட பிரதேச மக்கள் உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

சம்பவ ஸ்தலத்திற்கு விரைந்த தலவாக்கலை பொலிஸார் சடலத்தை பார்வையிட்ட பின் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பெண் நீரில் அடித்துக் கொண்டு வந்து உயிரிழந்தாரா அல்லது நீர்தேக்கத்தில் தவறி விழுந்து உயிரிழந்தாரா அல்லது எவராவது கொலை செய்து நீர்தேக்கத்தில் எறிந்து சென்றார்களா என்பது தொடர்பாக பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அக்கரப்பத்தனை சிலை உடைப்பு;

# விசாரணை நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்பட வேண்டும்

### இராதாகிருஷ்ணன் எம்.பி

ஹற்றன் சுழற்சி நிருபர்

அக்கரப்பத்தனை நகரிலுள்ள கோவிலில் சாமி சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு – உண்மை கண்டறியப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் அரசியல் செயற்பாட்டாளர்களுக்கிடையிலான கூட்டமொன்று நேற்று தலவாக்கலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“புதுவருடம் பிறந்தாலும் இன்னமும் வழி பிறக்கவில்லை. இன்று எந்த வரிசையில் நிற்கவேண்டி வருமோ என்ற அச்சத்துடன்தான் பொழுதுவிடிகின்றது.

ஜனாதிபதி செயலாளரை மாற்றினர். தற்போது மேலும் பல அரச அதிகாரிகளை மாற்ற தயாராகி வருகின்றனர். இதற்கிடையில் அமைச்சரவையும் மாற்றப்படவுள்ளதாம். இப்படி ஆட்களை மாற்றிக் கொண்டிருந்தால் தீர்வு கிட்டுமா?

அக்கரப்பத்தனையில் உள்ள கோவில் உடைக்கப்பட்டுள்ளது. சுமார் 60, 70 சிலைகள் இனந்தெரியாத நபர்களால் தேசமாக்கப்பட்டுள்ளன. இது மிகவும் மோசமான செயலாகும். இதற்கு முன்னர் லிந்துலை பகுதியில் மாதா கோவிலின் சிலை சேதமாக்கப்பட்டது.

# கிராமிய சமூக – பொருளாதார அபிவிருத்திக்காக பாடுபட வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது

## ஆளுனர் லலித் யூ.கமகே






எம்.ஏ.அமீனுல்லா

கிராமிய கூட்டுறவு நிலையங்கள் ஊடாக நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து, கிராமிய சமூக பொருளாதார அபிவிருத்திக்காக பாடுபட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளதாக மத்திய மாகாண ஆளுனர் லலித் யூ.கமகே தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தின் தெல்தோட்ட நகரில் புதிய கோப்சிற்றி விற்பனை நிலையமும், கூட்டுறவு கேட்போர் கூடமும் அண்மையில் மக்கள் பயன்பாட்டுக்கு ஒப்படைக்கப்பட்டன. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உதயனி கிரிந்து கொடவும் கலந்து கொண்டார்.

தொடர்ந்து பேசிய அவர்

மத்திய மாகாணத்தில் கூட்டுறவுச் சேவையை விஸ்தரிக்கும் நோக்கத்துடன் இவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

மத்திய மாகாண கூட்டுறவுத் துறையை வலுப்படுத்தும் நோக்கத்துடன், இதுவரை 12 கோப்சிற்றி விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தெல்தோட்டையில் திறக்கப்பட்டுள்ள கோப் சிட்டி மத்திய மாகாண சபையின் 13ஆவது கோப்சிற்றி நிலையமாகும்.

இது தெல்தோட்டை பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் பொறுப்பில் நிர்வகிக்கப்படும்.எனவும் ஆளுநர் தனது உரையில் குறிப்பிட்டார்.

# அக்கரபத்தனையில் ஆலய சிலைகள் உடைப்பால் பதற்றம்





ஹற்றன் விசேட, நுவரெலியா தினகரன் நிருபர்

அக்கரபத்தனை நகரில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலயத்தின் திருவுருவச் சிலைகளும் பொம்மைகளும் இனந்தெரியாதோரால் நேற்று இரவு விடியற்காலை உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஆலய நிர்வாக சபையினர் ஆகரபத்தனை பொலிசில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

அக்கரபத்தனை நகரில் அமைந்துள்ள பிரதான ஆலயமான சித்தி விநாயகர் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்று கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாக சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

புனர்நிர்மாண பணிகள் நிறைவடைந்து தற்பொழுது பொம்மைகளுக்கு வெளிப்புற பூச்சு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்து நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது இனந்தெரியாத குழு ஒன்றின் செயற்பாடு எனவும் ஆலயத்தில் நடைபெற இருந்த கும்பாபிஷேக நிகழ்வை குழப்புவதற்கான செயற்பாடு எனவும் மேலும் மத ரீதியிலான முரண்பாடுகளை உருவாக்க திட்டமிடப்பட்ட செயற்பாடாக இதனை கருதுவதாகவும் ஆலய நிர்வாக சபையினர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக ஆக்கரபத்தனை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சம்பவத்தில் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் லிந்துலை பகுதியில் அமைந்துள்ள மாதா சிலை ஒன்றும் உடைக்கப்பட்ட சம்பவம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## 2012 இன் 22 ஆம் இலக்கம் கொண்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் (திருத்த) சட்டத்தின் திருத்தம் செய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 66 எ பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அறிவித்தல்

ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளர் எம்.எம். விஜேநாயக்க ஆகிய நான் 2012 இன் 22 ஆம் இலக்கம் கொண்ட உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் (திருத்த) சட்டத்தின் திருத்தம் செய்யப்பட்ட உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 66எ பிரிவின் கீழ் என்னிடம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய ஊவா மாகாணத்திற்குள் அமைந்துள்ள பதுளை மாநகர சபையின் வெற்றிடமாகியுள்ள மாநகர முதல்வர் பதவிக்காக புதிய மாநகர முதல்வர் ஒருவரை தேர்வு செய்யும் பணிக்கான கூட்டம் 2022 ஜனவரி மாதம் 11 ஆம் திகதி பி.ப. 2.00க்கு பதுளை மாநகர சபை, பதுளை என்ற முகவரியில் அமைந்துள்ள பதுளை மாநகர சபையின் கூட்ட அறை என்ற இடத்தில் கூட்டப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

**எம்.எம். விஜேநாயக்க**
**உள்ளூராட்சி ஆணையாளர்**
**ஊவா மாகாணம்**

2022 ஜனவரி மாதம் 03 ஆம் திகதி,
**பதுளை, மாட்டின் சில்வா மாவத்தையில்**
**அமைந்துள்ள, ஊவா மாகாண உள்ளூராட்சி**
**திணைக்களத்தில்.**

## நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

நெடொல்பிடிய, கொடிகமுவ, 129 ஏ என்னும் முகவரியில் வசிக்கும் ஜயசூரிய பட்டபன்டிகே புத்தி அஷன்திகா ஆகிய நான் கொழும்பு மாவட்டத்தில் சிங்கள மொழியில் கடமையாற்றும் பிரசித்த நொத்தாரிசாக உட்பிரவேசிப்பதற்காக நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்கு தோற்றுவதன் பொருட்டு 107 ஆம் அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின், 7 வது பிரிவின் பிரகாரம் இத்தினம் தொடக்கம் ஒரு மாதத்தின் பின்னர் பதிவாளர் நாயகத்திடம் கோருவதாக அனைவருக்கும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்

**ஜயசூரிய பட்டபன்டிகே நொத்தாரிசு எழுதுவினைஞர் புத்தி அஷன்திகா**
**129 ஏ கொடிகமுவ, நெடொல்பிடிய.**
2021.12.31


Replies to
Classifieds
&
Casual
Advertisements
published
C/o the
Daily News
should only be
sent by
ordinary post.
Replies sent
under
registered cover
will not be
accepted.


## சிறு விளம்பரம்



**மோட்டார் வாகனங்கள்**

122



**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

WP QF-3520 Bajaj threewheel, 2006 கூடிய விலைக்கே ள்விக்கு வெலிபல் ஃபினான்ஸ் பிஎல்சி. இல. 310, காலி வீதி, கொழும்பு 03 தொ.பே. 0711 21 0810.
085639

## கம்பனியின் நிலபர மாற்றம் தொடர்பான பொது அறிவித்தரல்

2021 டிசம்பர் 31ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் விற்பனைக்காக முன்வைப்பொன்றின் மூலமாக சாதாரண வாக்குரிமை பங்குகளின் ஆரம்ப பொது முன்வைப்பொன்றினால் அதனது நிலபரத்தை 'வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று' என்பதிலிருந்து 'வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றாக' மாற்றம் செய்யப்பட்டதன் விளைவாக கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தலை 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 11(5)ஆம் பிரிவின் பிரகாரம் நாம் இத்தால் அறிவித்தலை வழங்குகின்றோம்.

**கம்பனியின் முன்னைய பெயர்:** எல் ஓ எல்சி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட்
**கம்பனி பதிவிலக்கம்:** PB4823
**பதிவு முகவரி:** இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய
**கம்பனியின் புதிய பெயர்:** எல் ஓ எல் சி ஜெனரல் இன்சூரன்ஸ் பிஎல்சி

**சபையின் கட்டளைப் பிரகாரம்,**
**எல் ஓ எல் சி கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிறைவட்) லிமிடெட்**
**கம்பனிச் செயலாளர்கள்**
2021 டிசம்பர் 31ஆம் திகதியன்று


Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams


## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
## அறிவிப்பு

2020ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தர) பரீட்சையின் மீள் ஆய்வு பெறுபேறுகள் அடிப்படையில் பரீட்சை முடிவுகள் மாறிய விண்ணப்பதாரர்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியாமல் போன மேன் முறையீடு விண்ணப்பதாரர்களிடமிருந்து 2020/2021 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை அழைக்கிறது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC), டிசம்பர் 29, 2021 அன்று வெளியிடப்பட்ட 2020ஆம் ஆண்டுக்கான (உயர்தர) பரீட்சை இன் மீள் ஆய்வு பெறுபேறுகள் அடிப்படையில் பெறுபேறுகள் மாறிய விண்ணப்பதாரர்களிடமிருந்து மற்றும் 2020/2021 கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க வழங்கப்பட்ட காலக்கெடுவிற்குள் விண்ணப்பிக்க முடியவில்லை என்று மேல்முறையீடு செய்தவர்களிடமிருந்து இணையவழி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. அத்தகைய விண்ணப்பதாரர்கள் 2020/2021ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதிக்காக 03 ஜனவரி 2022 முதல் 10 ஜனவரி 2022 வரை இணைவழி மூலம் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்தை சமர்ப்பிப்பது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.ugc.ac.lk) ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பம் பெற்றுக்கொள்ளல் பற்றிய செய்தித்தாள் விளம்பரத்தைப் பார்க்க முடியும்.

**முக்கியம்**

2020/2021 கல்வியாண்டிற்கு செல்லுபடியாகும் பல்கலைக்கழக அனுமதி கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற தேவைகளை பூர்த்தி செய்து இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு உருவாக்கப்பட்ட விண்ணப்பத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி அல்லது தெளிவான புகைப்படத்தை பதிவு தபால் மூலம் அனுப்புவதுடன் apply2020@ugc.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டியது கட்டாயமாகும் என்பதை நினைவில் கொள்க.

மேலும் மேற்கூறிய விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும் 2020/2021 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான இந்த வாய்ப்பு, சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தால்/வளாகம்/நிறுவனத்தால் ஏற்கவே நடாத்தி முடிக்கப்பட்ட திறன்/நடைமுறைத் தேர்வுகள் கொண்ட கற்கை நெறிகளுக்குப் பொருந்தாது என்பது குறிப்பிடத்தக்கது,

**தலைவர்,**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.**
03.01.2022

### இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
### பெருந்தெருக்கள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு
## ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வழங்குதல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் இரத்தினபுரி பிரதான பொறியியலாளர் அலுவலகத்தின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வகையில், இரத்தினபுரி பிரதான பொறியியலாளர் வலயத்தில் வீதி பராமரிப்பு வேலைகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வழங்குவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி இல. | ஒப்பந்த்தின் பெயர் | தொழிலாளர்களின் எண்ணிக்கை | | | ஒப்பந்தக் காலம் (மாதங்கள்) | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| | | மேசன் | தேர்ச்சி பெற்றவர் | தேர்ச்சி அற்றவர் | | |
| 01 | இரத்தினபுரி நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவின் மல்வல அலகுக்கு ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளல் | 01 | 02 | 19 | 12 | 100,000.00 |
| 02 | இரத்தினபுரி நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவின் பரகடுவ அலகுக்கு ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளல் | 01 | 02 | 17 | 12 | 100,000.00 |
| 03 | இரத்தினபுரி நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவின் கலவான அலகுக்கு ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளல் | 01 | 02 | 10 | 12 | 100,000.00 |
| 04 | இரத்தினபுரி நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவின் எபிட்டவல அலகுக்கு ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளல் | 01 | 02 | 20 | 12 | 100,000.00 |
| 05 | பெல்மடுல்ல நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவின் மாதம்பே அலகுக்கு ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளல் | 02 | 03 | 27 | 12 | 100,000.00 |
